வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர் ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 07   12.04.2026 ஞாயிற்றுக்கிழமை   இதழ் : 96   பக்கங்கள் : 16

## உர விவகாரம் தொடர்பில் நான் பேசப்போவதில்லை!


**அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவிப்பு**

கொழும்பு, ஏப். 12

2015 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஊழலுக்கு எதிராக நான் செயல்பட்டுள்ளேன். உர விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அது குறித்து பேசப் போவதில்லை. எம்மை ஊழல்வாதிகள் என்று விமர்சிக்கும் தகுதி எவருக்கும் கிடையாது. இந்த வழக்கு முடிவடைந்தவுடன் பெயர்

15

## அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டின் சட்டங்களுக்கு ஒரு அவமதிப்பு



ஈழநாடுவுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச்

(முழு விவரம் 4ஆம் பக்கத்தில்)

# தையிட்டி காணிகளை விடுவிப்பதற்கு 17 ஆம் திகதி காணி அளவீட்டுப் பணி!

**அமைச்சர் சந்திரசேகர் தகவல்**



யாழ்ப்பாணம், ஏப். 11

வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் விகாரை அமைந்துள்ள தனியார் காணிகளை விடுவிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் ஏப்ரல் 17 ஆம் திகதி காணி அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள தனியார் காணிகள் எதிர்வரும் 17ஆம் திகதி நில அளவைத் திணைக்கள அதிகாரிகளால் அளவீடு செய்யப்படும்.

காணி அளவீடுகள் நிறைவடைந்ததும், உரிய ஆவணங்களின் அடிப்படையில் காணி உரிமையாளர்கள் யார் என்பது உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்படும்.

அவ்வாறு உரிமையாளர்கள்

15

## நெடுந்தீவு உட்பட தீவக ஆசிரியர்களுக்கு அநீதி; இடர் கொடுப்பனவு விடயத்தில் புதிய தீர்மானம்

**கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு**

கொழும்பு, ஏப். 11

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு உள்ளிட்ட பின்தங்கிய தீவுப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளை வகைப்படுத்தியதில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக, அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இடர் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதை கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் நலக கலுவேவ இது குறித்து தெரிவிக்கையில், மாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட அளவீடுகளின்

15

## தியாகி அன்னை பூபதியின் ஊர்தி தடுக்கப்படவில்லை!

**மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி விளக்கம்**

யாழ்ப்பாணம், ஏப். 12

வடமராட்சி கிழக்கு பகுதியில் அன்னை பூபதியின் நினைவு ஊர்தி பொலிஸாரால் தடுக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

குறித்த ஊர்திப் பயணம் தொடர்பாக முறையான முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்றும் இதன் காரணமாக, பாதுகாப்பு

15

## இலங்கையில் அதிகரிக்கும் பிரிந்து வாழும் தம்பதிகள்!

கொழும்பு, ஏப். 12

இலங்கையில் சட்டப்பூர்வமாகப் பிரிந்தவர்கள் மற்றும் சட்டபூர்வமின்றிப் பிரிந்தவர்களின் எண்ணிக்கையில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் உள்ளதாக தெரியவந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் 2024 சனத்தொகை கணக்கெடுப்பின்படி, இலங்கையின் திருமண நிலை குறித்த முக்கியத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கணக்கெடுப்பின்படி நாட்டில் 10,512,344

15

## பயணிகள் போக்குவரத்து அனுமதிக்கு கால எல்லை!

**அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு**

கொழும்பு, ஏப். 11

பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் பொதுமக்களுக்குச் சொந்தமானவை என்பதால், அவற்றுக்கான கால எல்லை ஒன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும்

15

## இலங்கை வருகிறார் மாலைதீவு ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 12

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சு அடுத்த மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இது தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்கள் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான மாலைதீவு தூதுவர் ஆகியோருக்கிடையில் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றன.

இந்தச் சந்திப்பின் போது, கடற்றொழில்

15

## அமெரிக்கா-ஈரான் இடையே மறைமுகப் பேச்சுவார்த்தை!

தெஹ்ரான், ஏப். 12

நீண்ட காலமாக நிலவி வரும் மோதலை தணிக்கும் நோக்கில், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளதாக பிபிசி ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே இன்னும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை எனவும் தற்போது பாகிஸ்தான் மத்தியஸ்தர்கள் ஊடாகவே மறைமுகமாகத் தகவல்கள் பரிமாறப்பட்டு வருவதாக தகவல்களை மேற்கோள்காட்டி இந்த செய்தி

15

## ஏப்ரல் 15,16 17 இல் அரச அலுவலகங்கள்

**வழமை போல் இயங்கும்**

கொழும்பு, ஏப். 12

எதிர்வரும் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில், அனைத்து அரச அலுவலகங்களும் வழமை போன்று இயங்கும் என, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த திகதிகளில், அரச ஊழியர்கள் இணைய வழியில் பணியாற்றுவதற்கு முன்னர்

15

## புத்தாண்டு காலத்தை முன்னிட்டு எரிபொருள் கியூ.ஆர். முறை நீக்கம்!

கொழும்பு, ஏப். 11

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு, வாகன உரிமையாளர்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கும் வகையில் எரிபொருள் விநியோகத்தில் தற்காலிக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் மக்கள் தடையின்றி பயணங்களை மேற்கொள்வதற்கு வசதியாக நேற்று முதல் எதிர்வரும் 18-ஆம் திகதி வரை வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும்போது கியூ.ஆர். குறியீட்டு முறையைப் பின்பற்றப்போவதில்லை

15



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# விலையேற்றத்தால் முடங்கும் பாடசாலை மதிய உணவு திட்டம்

## மாணவர்களின் போஷாக்கு கேள்விக்குறி

கொழும்பு, ஏப். 12

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சமையல் எரிவாயுவின் விலை உயர்வு காரணமாக, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டம் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் சுமார் 7,000 பாடசாலைகளில் 1. 6 மில்லியன் மாணவர்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் மதிய உணவுத் திட்டத்துக்காக, ஒரு மாணவனுக்கு தலா 110 ரூபாய் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தற்போது நிலவும் சந்தை விலையேற்றத்தால் இந்தத் தொகையைக் கொண்டு சத்தான உணவை வழங்குவது விநியோகஸ்தர்களுக்கு கடினமாக உள்ளது.

குறிப்பாக, இந்த விநியோகஸ்தர்களில் பெரும்பாலானோர் சமூர்த்திப் பயனாளிகள் என்பதால் இச்சுமையை அவர்களால் தாங்க முடியாதுள்ளது.

இதன் காரணமாக மாணவர்களின் போஷாக்கு நிலையை உறுதிப்படுத்த, ஒரு மாணவருக்காக ஒதுக்கப்படும் நிதியை உடனடியாக உயர்த்துமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது."

- என்றார். (எ)

# உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக மணல் விநியோகிக்க பொறிமுறை

## முல்லைத்தீவில் தனி செயலி உருவாக்கம்

முல்லைத்தீவு, ஏப். 12

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குளங்களிலிருந்து மணலை கழுவி எடுத்து, உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக விற்பனை செய்யும் புதிய பொறிமுறையை விரைவில் உருவாக்கவும், வடக்கு மாகாணத்தின் மணல் விநியோக நடவடிக்கைகளை கையாளவும் கண்காணிக்கவும் தனியானதொரு செயலியை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் தூய்மை இலங்கை செயலணியின் மாகாண இணைப்பாளர் சு. கபிலன் ஆகியோரின் விசேட பங்கேற்புடன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கூறுகையில்,

"முல்லைத்தீவு மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மீன்பிடி ஆகியவற்றுடன் சட்டவிரோதக் கனியவள அகழ்வும் பரவலாக இடம்பெறுகின்றது. குறிப்பாக, மணல் மற்றும் கிரவல் என்பன மிக மோசமான முறையில் சட்டவிரோதமாக அகழப்படுகின்றன.

மணல் மாபியாக்கள் யார் என்பது எமக்குத் தெரியும், அவர்களுக்குத் துணைபோகும் அதிகாரிகளையும் நாம் அறிவோம். முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்ட அனுமதிகளைக் கூட முறைகேடாகப் பயன்படுத்தி, அதிக இலாபத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு மணல் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஒரு டிப்பர் லோர்ட் மணல் விற்பனை ஊடாக சுமார் 80,000 ரூபாய் வரை இலாபமீட்டுகின்றனர். இவ்வாறான செயல்பாடுகளை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது"- என்றார். (எ)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு எதிரான கொள்கை நடைமுறை

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 12



தரமற்ற நிலக்கரி மோசடிக்கு மேலதிகமாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு எதிராக அரசாங்க கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்வலு சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசாங்கத்தின் நிலக்கரி கொள்வனவில் நிலக்கரித் துறையில் சாதாரண மோசடி அல்ல, மாறாக பாரிய ஊழல் இடம்பெற்றுள்ளது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்தமையே இந்த மோசடியாகும்.

இந்த நிலக்கரி மோசடிக்கு மேலதிகமாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு எதிரான அரசாங்கக் கொள்கையொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒருபுறம் எரிபொருள் மாபியாவுக்கு இடமளித்துவிட்டு, மறுபுறம் சூழலுக்கு உகந்த, குறைந்த செலவிலான மற்றும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கக்கூடிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அழிக்கும் இந்தச் சதி மிகவும் பாரதூரமானது.

இந்த அனைத்துக் காரணிகளின் அடிப்படையிலும், எரிசக்தி அமைச்சர் தொடர்ந்தும் பதவியில் நீடிப்பது தார்மீக ரீதியானது அல்ல என்பதே எமது நம்பிக்கையாகும்.

மேலும், தரமற்ற நிலக்கரி குறித்து நாங்கள் வாதங்களை முன்வைத்தபோது, ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் வரிசையாக வந்து என்ன கூறியது? அவ்வாறான தரம் குறைந்த நிலக்கரி பிரச்னை எதுவும் இல்லை என்றே கூறினார்கள்.

ஆனால், தரவுகள் மூலம் நிலக்கரி தரமற்றது என நிரூபிக்கப்பட்டபோது, நிலக்கரி தரம் குறைந்ததுதான் ஆனால், மோசடி எதுவும் நடக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

மேலும், அரசாங்கம் கொண்டுவந்துள்ள தரம் குறைந்த நிலக்கரி மூலம் எதிர்பார்க்கப்படும் மின் உற்பத்தியை பெற்றுக்கொள்ள முடியாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தெரிவிப்பது பொய் என்றால் ஆணைக்குழுவின் அறிக்கை பொய் என தெரிவிக்க வேண்டும். அதேபோன்று 9 கப்பல்கள் மூலம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள தரம் குறைந்த நிலக்கரியால் 8. 4 பில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மின் உற்பத்தி குறைந்துள்ளதன் மூலம் மின் துண்டிப்புக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது."- என்றார். (எ)

# கவிதை நூல் அறிமுக விழா

நெடுந்தீவு சபேசனின் "கேட்காமலே தரலாம்" கவிதை நூல் வெளியீட்டு அறிமுக விழா யாழ். நெடுந்தீவு கலாச்சார மண்டபத்தில் இன்று (12)ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாண செ. மகேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நூல் அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக நெடுந்தீவு சபேசனின் தாயார் அன்னை அன்னலட்சுமி கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், கௌரவ விருந்தினர்களாக இந்துமத குரு பிரம்மஸ்ரீ கா. புவனேந்திர சர்மா மற்றும் நெடுந்தீவு பங்கு தந்தை அருட்பணி ம.அபிலஸ் அடிகளார் உட்பட தென்னிந்திய திருச்சபை போதகர் அருட்பணி ஜீ.சி. றொபின்சன் ஆகியோரின் ஆசியுரையுடன் நூல் வெளியீட்டு அறிமுக விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா கடந்த மாதம் 29 ஆம் திகதி சென்னை டிஸ்கவரி புத்தக அரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.






# ரூ. 22 பில்லியன் நிலக்கரி மோசடி: அமைச்சர் பதவி விலகவேண்டும்

## முஜிபுர் ரஹ்மான் காட்டம்



கொழும்பு, ஏப். 12

நிலக்கரி கொள்வனவு மோசடி மூலம் நாட்டுக்கு 22 பில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திய அமைச்சர் பதவி விலகுவார் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், சிறந்த அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதாக வந்த இவர்கள், எந்த குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டாலும் பதவி விலகுவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மின்வலு சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவு மூலம் அரசாங்கத்துக்கு 22 பில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திய அமைச்சர் பதவி விலகுவார் என்றே நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. அவரின் வெட்கம் என்ற நரம்பு பெலவத்தையால் துண்டித்திருக்கிறது. அதனால், அவருக்கு தொடர்ந்து இந்த அமைச்சுப் பதவியில் இருக்க முடியும்.

அத்துடன் இவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது, அப்போது இருந்த அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு திருடர்கள் என குற்றச்சாட்டு தெரிவித்தபோது, அந்த அமைச்சர்கள் அமைச்சுப்பதவியில் இருந்து விலகினார்கள். ரவி கருணாநாயக்க, திலக் மாரப்பன்ன ஆகியோருக்கு எதிராக அன்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டபோது, அவர்கள் அமைச்சுப் பதவியை துறந்தார்கள். ஆனால், சிறந்த அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதாக வந்த இவர்கள், எந்த குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டாலும் பதவி விலகுவதில்லை. மாறாக ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் அமைச்சரை பாதுகாக்கவே முற்படுகிறார்கள்."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விசாரணைகள் மூலம் வெளிவரும் விடயங்களுக்கமைய நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 12

வலுசக்தி அமைச்சர் நிலக்கரி விடயத்தில் ஊழல் நோக்கத்தில் செயல்பட்டார் என்று எங்கேயும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஊழல் நோக்கத்தில் இது நடந்தது என்பதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு நடந்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்பதை மக்களுக்கு உறுதியளிக்கின்றோம். எவ்வாறாயினும் ஊழல் முறைமையை சீர்செய்து முன்நோக்கிச் செல்லவே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. விசாரணைகளில் வெளிவரும் விடயங்களுக்கு அமைய நாங்கள் நடவடிக்கைகளை எடுப்போம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து எதிர்க்கட்சியினர் அவர்களை போன்று எமது அரசாங்கத்தையும் ஊழல் மிக்கது என்று காட்டும் நோக்கத்திலேயே செயல்படுகின்றனர். எதிர்க்கட்சிக்கென பணிகள் உள்ளன. அரசாங்கத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதாகவும் இதன்மூலம் ஊழல்களை வெளிக்கொண்டுவரக் கூடாது என்று நாங்கள் கூறவில்லை. ஆனால், ஊழலுக்கு எதிரான ஆட்சியின் போது அவர்களின் ஊழல்களை மூடி மறைப்பதற்காக ஏதாவது கதைகளை கட்டியெழுப்ப வேண்டும் என்பதாக இருக்கக்கூடாது.

அரசாங்கத்தில் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன என்று காட்ட முயற்சிக்கும் பிரதான தரப்பினர் யாரென்று ஆராய்ந்தால் அவர்களின் உண்மை நோக்கத்தை புரிந்துகொள்ள முடியும். கடந்த பல வருடங்களில் நாட்டில் இடம்பெற்ற ஊழல்களில் நேரடியாக சம்பந்தப்பட்ட மற்றும் அந்த ஊழல்களை பாதுகாக்க முயற்சித்தவர்களே இப்போது அதிகளவில் பேசுகிறார்கள். ஊழல்களுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள்.

நாட்டை பொறுப்பேற்கும் போது ஊழல் பொறிமுறைகளுடனான முறைமையையே பொறுப்பேற்றோம். இவற்றை சீர் செய்யவே எமது அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த நிலக்கரி தொடர்பான விவாதமும் மிகவும் முக்கியமானது. இந்த செயல்பாடுகளில் வெளியாகும் தகவல்கள் மிகவும் முக்கியமானவை."- என்றார். (எ)

# "தரமற்ற நிலக்கரி கொள்வனவினால் நாட்டுக்கு 19 பில்லியன் ரூபா நஷ்டம்"

கொழும்பு, ஏப். 12

தரமற்ற நிலக்கரி கொள்வனவால் மின்சார சபையின் நஷ்டம் 19 பில்லியன் ரூபாயாக உயர்வடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 700 மில்லியன் டொலரை வழங்க இணக்கம் தெரிவித்துள்ள போது, மின்னுற்பத்திக்கான செலவை ஈடுசெய்யும் வகையில் மின்கட்டணம் திருத்தப்பட வேண்டும் என்றும், குறைந்தப்பட்சம் 25 முதல் 30 சதவீதமளவில் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது. இதுதான் உண்மை. இது பொய் என்றால் உண்மையான தரவுகளை ஆளும் தரப்பு முன்வைக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# புத்தாண்டு காலத்தில் போக்குவரத்து விதி மீறல்களுக்கு கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 12

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை முதல் போக்குவரத்து விதிகளை மீறும் வாகன சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ஜே. சேனாதீர தெரிவித்தார்.

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் தொடர்பான காணொலி ஆதாரங்களை பொதுமக்கள் சமர்ப்பிப்பதற்காக 070, 4755600 என்ற விசேட வட்ஸ்அப் இலக்கத்தையும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிமுகப்படுத்தியுள்ளார். (எ)

# மோசடிகளில் ஒரு பங்கு அநுரவுக்கும் செல்கிறதா?

## ரஞ்சித் மத்தும பண்டார கேள்வி

கொழும்பு, ஏப். 12

வலுசக்தி அமைச்சருக்கு எதிராக நீதிமன்றத்தில் மோசடி தொடர்பில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு ஜனாதிபதி நாட்டின் முக்கிய அமைச்சுப்பதவியை வழங்கியுள்ளதன் மூலம் அந்த மோசடிகளில் ஒரு பங்கு ஜனாதிபதிக்கும் செல்கிறதா? என்ற சந்தேகம் எழுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்வலு சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"நிலக்கரி மோசடி குற்றச்சாட்டுக்குள்ளாகி இருக்கும் அமைச்சர் குமார ஜயக்கொடி, அநுரகுமார திஸநாயக்க விவசாய அமைச்சராக இருந்த சமயத்தில், உர கூட்டுத்தாபனத்தின் தலைவராக குமார ஜயக்கொடியை நியமித்திருந்தார். அங்கு அவர் மேற்கொண்ட மோசடி தொடர்பில் தற்போதும் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர் தற்போது நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மோசடி குற்றச்சாட்டுள்ள ஒருவருக்கு நாட்டில் இருக்கும் முக்கியமான அமைச்சுப்பதவியை ஜனாதிபதி வழங்கி இருக்கிறார். உர கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருக்கும்போது இவருக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டு இருப்பது ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். அது தெரிந்தும் ஜனாதிபதி குமார ஜயக்கொடிக்கு முக்கியமான அமைச்சுப்பதவியை வழங்கியுள்ளதன் மூலம், இந்த மோசடியில் சில பங்கு ஜனாதிபதிக்கும் செல்கிறதா? என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது."- என்றார். (எ)

### கொழும்பில் பாரிய சுற்றிவளைப்பு:

# ரூ. 2 கோடி பெறுமதியான வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றல்

கொழும்பு, ஏப். 12

மேல் மாகாணத்தின் கொழும்பு பகுதியில் உள்ள சில விற்பனை நிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட சோதனையில் 2 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய வெளிநாட்டு மதுபான போத்தல்களை சுங்கவரித் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

நம்பகமான தகவலொன்றின் அடிப்படையில், கொழும்பில் உள்ள சில விற்பனை நிலையங்களை மையப்படுத்தி சுங்கவரி விசேட அதிரடிப்படையினரால் இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டதாக சுங்கவரி ஆணையாளர் நாயகம் பிரேமரத்ன தெரிவித்தார்.

இந்தச் சோதனை நடவடிக்கையில் 4 குழுக்களின் கீழ் சுமார் 30 உத்தியோகத்தர்கள் பங்கேற்றதாக சுங்கவரி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமல், புத்தாண்டு காலப்பகுதியை இலக்கு வைத்து விற்பனைக்காக இந்த மதுபானங்கள் தயார் செய்யப்பட்டிருந்ததோடு, அந்த மதுபானப் போத்தல்களில் ஒட்டப்பட்டிருந்த பாதுகாப்பு வில்லைகள் முற்றிலும் போலியானவை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுங்கவரி ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த மதுபான கையிருப்பு இலங்கைக்கு எவ்வாறான முறையில் கொண்டுவரப்பட்டது என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுங்கவரி ஆணையாளர் நாயகம் பிரேமரத்ன மேலும் தெரிவித்தார். (எ)

# பல்வேறு விபத்துக்களில் சிறுமி உட்பட 7 பேர் பலி

கொழும்பு, ஏப். 12

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துக்களில் சிறுமி ஒருவர் உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர்.

கொழும்பு - ஹொரண வீதியின் பொகுணுவிட்ட சந்திக்கு அருகில் ஹொரண நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில், கிரிஎல்ல பகுதியைச் சேர்ந்த 45 வயது நபர் உயிரிழந்தார்.

இதேவேளை, பாதுக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுலாவ - குருவல வீதியின் குருவல பகுதியில் மாதுலாவ சந்தியிலிருந்து லியன்வல சந்தி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று பாதசாரி ஒருவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது காயமடைந்த பாதசாரியும் மோட்டார் சைக்கிள் சாரதியும் ஹோமாகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பாதசாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் பாதுக்க பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (எ)

# ஐ. ம. சக்தி தவிசாளராக கபீர் ஹாஷிம் நியமனம்



கொழும்பு, ஏப். 12

2026 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவிக்கு, அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ)

# கற்பிட்டியில் 907 கிலோ உலர்ந்த மஞ்சள் மீட்பு

புத்தளம், ஏப். 12

கற்பிட்டியின் பங்களவத்தை மற்றும் சேதவாத்தை கடற்கரை பகுதிகளில் கடற்படையினர் முன்னெடுத்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 907 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டின் சட்டங்களுக்கு ஒரு அவமதிப்பு



**ஈழநாடுவுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச்**

"பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த காலங்களிலும் சரி, அண்மைக் காலங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்ட விதம் நாட்டின் சட்டங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகவே நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தினால் பல அத்துமீறல்களும் மனக்குறைகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளது.

அரசாங்கம் இந்தச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டு வர விரும்பினால், அது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். இது ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தையோ திருப்திப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, இது நீதிக்கான ஒரு விடயமாகும்."

-இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஐ.நா. வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச்.

ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அண்மையில் யாழ்ப்பாணத்துக் கான விஜயமொன்றை மேற்கொண்டிருந் தார். இந்த விஜயத்தின்போது அவர் ஈழநாடு பத்திரிகை அலுவலகத்துக்கும் வருகை தந்திருந்தார். அங்கு ஈழநாடு வுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவரது செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

**கேள்வி:-** தற்போது இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்து வரும் பிரதான செயற்பாடுகள் எவை?

**பதில்:-** ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் கால்பதித்து தற்போது 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த நீண்ட காலப்பகுதியில் இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையில் மிகவும் வலுவான மற்றும் நிலையானதொரு பங்களிப்பு பேணப்பட்டு வருகின் றது. கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கை அரசாங்கத்துடனும் சமூகங்களுடனும் நாங்கள் இணைந்து பணியாற்றி வருகின் றோம்.

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்ற இக்கட்டான காலப்பகுதிகளிலும் சரி, முன்னேற்றகரமான காலங்க ளிலும் சரி, நாம் எப்போதும் இலங்கை யுடன் உறுதியாக நின்றிருக்கிறோம். இலங்கையின் அபிவிருத்தி வரலாற்றி லும் அதன் வளர்ச்சிப் பாதையிலும் ஐக்கிய நாடுகள் சபை நீண்டகாலமாக ஒரு அங்கமாக இருந்து வருகின்றது.

தற்போது இலங்கையில் எமது அமை ப்பு சில முக்கிய துறைகளில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக பொதுச் சேவைகளின் தரம் மற்றும் வறுமை ஒழிப்பு: பொதுச் சேவைகளை மேம்படுத்துவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் நாம் பணியாற்றி வருகின்றோம்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்: பசுமைப் பொருளாதார மாற்றத்திற்கும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கும் உதவி வருகின்றோம்.

பொருளாதார வளர்ச்சி: வேலைவாய் ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஒரு ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல்.

சிறந்த ஆட்சிமுறை மற்றும் டிஜிற்றல் மயமாக்கல்: அரச நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தை உள்வாங்குவதற்கு ஆதரவளித்தல்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்: அமைதியை நிலைநாட்டும் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இவை அனைத்திற்கும் மேலாக, பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுப்படுத்துதல் என்பவற்றில் நாம் அதிக முதலீடு செய்கிறோம். தலைமைத்துவ பதவிகளில் அதிக பெண்கள் அங்கம் வகிப்பதையும், வேலைவாய்ப்பு, வளங்கள் மற்றும் அரசியல் என அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு சமமான பங்கு கிடைப்பதையும் உறுதி செய்வதே எமது நோக்கமாகும்.

**கேள்வி:-** பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடு கள் சபை திருப்தியடைந்துள்ளதா?

**பதில்:-** "திருப்தி" என்பது ஒரு கடினமான விடயம். எவரும் முழுமை யான திருப்தியை அடைந்துவிடுவ தில்லை. அந்த வகையில், நாடு ஒன்று பட்டதாக உணரவும், உண்மையான நல்லிணக்கத்தை எட்டவும் இன்னும் அதிகளவிலான பணிகள் முன்னெடுக் கப்படவேண்டும் என்றே நாங்கள் கருது கிறோம்.

ஒருபுறம், ஜனாதிபதியின் கருத்துக் கள் எமக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன. பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை மற்றும் யாழ்ப்பாணத்தில் அவர் நிகழ்த் திய பல்வேறு உரைகள் என்பன நாடு சரியான திசையில் பயணிப்பதற்கான சமிக்ஞைகளாகவே நான் கருதுகிறேன். இத்தகைய நகர்வுகள் நாட்டுக்கு அவசிய மானவை மட்டுமல்ல, நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் மிக முக்கியமானவை. இது வெறும் நீதியுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. நாட்டின் எதிர்கால வலிமைக்கும் அவசியமானது.

**கேள்வி:** நல்லிணக்கத்திற்காக அரசாங்கமும் இந்த நாடும் போதுமான அளவு செயற்பட்டுள்ளதா?

**பதில்:** நிச்சயமாக இல்லை. நாட்டில் இன்னும் பாரியளவிலான நம்பிக்கையீனம் நிலவுவதாகவே நான் கருதுகிறேன். சமூகங்களுக்கு இடையே இப்போதும் பரஸ்பர அவநம்பிக்கை காணப்படுகின்றது. நாட்டை ஒன்றிணைக்கக்கூடிய பாரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர், இந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் அதிகம் முயற்சி செய்ய வேண்டும்.

உதாரணமாக, இன்று நாம் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்றைச் செய்ய விரும்பினாலும், அந்த மேசைக்கு வருபவர்களிடையே ஒரு குறிப்பிட்ட அளவிலாவது பரஸ்பர நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக தற்போதைய சூழலில் அத்தகைய நம்பிக்கை இல்லை.

அதனால்தான் பின்வரும் விடயங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்:

காணி உரிமை: நிலங்களுக்கான சமமான அணுகுமுறையை உறுதிப்படுத்துதல்.

முக்கிய வழக்குகள்: நீண்ட காலமாக நிலுவையிலுள்ள அடையாளமிக்க வழக்குகளை முன்னோக்கிக் கொண்டு செல்லுதல்.

நீதித்துறை: நாட்டின் நீதித்துறை சிறப்பாகச் செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல்.

நினைவுகூரல்: உயிரிழந்தவர்களை நினைவு கூரும் உரிமைக்கு மதிப்பளித்தல்.

காணாமலாக்கப்பட்டோர்: காணாமலாக்கப்பட்டோர் குறித்துத் தேடும் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துதல். ஆயிரக்கணக்கான மக்கள் காணாமலாக் கப்பட்டுள்ள நிலையில், அதனை நாம் அப்படியே மறந்துவிட முடியாது. அவர்களைக் கண்டறியும் முயற்சிகள் அவசியம். தற்போது சில இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள மனிதப்புதை குழிகள் குறித்து முன்னெடுக் கப்படும் விசாரணைகள் எமக்கு நம்பிக்கையளிக்கின் றன.



**பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த காலங்களிலும் சரி, அண்மைக்காலங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்ட விதம் நாட்டின் சட்டங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகவே நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தினால் பல அத்துமீறல்களும் மனக்குறைகளும் ஏற்படுகின்றன.**

**கேள்வி:** பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பார்வை என்ன?

**பதில்:** பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த காலங்களிலும் சரி, அண்மைக்காலங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்ட விதம் நாட்டின் சட்டங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகவே நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தினால் பல அத்துமீறல் களும் மனக்குறைகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளது.

அரசாங்கம் இந்தச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டு வர விரும்பினால், அது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். இது ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தையோ திருப்திப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, இது நீதிக்கான ஒரு விடய மாகும். தனது நாட்டு குடிமக்களுக்கு நியாயமான சட்டங்களை இயற்ற வேண்டிய பொறுப்பு அரசாங் கத்திற்கு உண்டு. பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு போதும் நீதியானதாக இருக்கவில்லை. அண்மையில் கூட, இந்தச் சட்டத் தின் கீழ் பொலிஸ்துறை போலியான ஆதாரங் களை முன்வைத்ததாகவும், அதனால் ஒரு இளைஞனின் வாழ்க்கை எவ்வித காரண முமின்றி பாழாக்கப்பட்டதாகவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது போன்ற பல சம்பவங்கள் நடக்கின்றன. எந்த வொரு நாட்டிலும் இத்தகைய நிலைமையை ஏற்க முடியாது. எந்த வொரு குடிமக னும் இவ்வாறான அநீதியான சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

**கேள்வி:-** தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் செயற்பா டுகளை ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு நோக்குகின்றது?

**பதில்:** பொதுவாக ஒரு நாட்டில் தேர்தல் பிரசாரங் களை முன்னெடுப்பதை விட, அந்த நாட்டை ஆட்சி செய்வது என்பது மிகவும் சவாலான விடயமாகும். பிரசாரக் களத்தை விடவும் நாட்டை நிர்வகிப்பது கடினமானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். எனவே, ஒரு நாட்டை ஆட்சி செய்வதில் உள்ள சிக்கல்களை நாம் மதிப்பளித்துப் பார்க்கவேண்டும்.

அதேவேளை, எந்தவொரு நாட்டிலும் அரச நிறுவனங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது என்பது மிகவும் கடினமான காரியம். பொது நலனுக்காக உழைக்க முன்வந்துள்ள ஒரு நாட்டின் தலைவர்களிடம் நாம் ஓரளவுக்கு கனிவுடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசாங்கம், பொது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே தனது இலக்குகளைக் கொண்டுள்ளதாக நான் கருதுகிறேன். அவர்கள் மக்களுக்காகவே பணியாற்றுகிறார்கள். உலகெங்கிலும் உள்ள ஏனைய நாடுகளிலும் பொது நலனுக்காக உழைக்கும் இத்தகையதொரு குழுவினர் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இருப்பினும், இன்றைய சூழலில் ஒவ்வொரு இலங்கையரும் மேலதிக சீர்திருத்தங்களையும், துரிதமான முடிவுகளையும், கூடுதல் முதலீடுகளையும் எதிர்பார்க்கின் றனர். எனவே, நாம் இரண்டு விடயங்களைச் செய்ய வேண்டியுள்ளது:

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
14.04.2026 ஞாயிற்றுக்கிழமை

விசுவாவசு வருடம், பங்குனி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இதுதான் புதிய அரசியல் கலாசாரமா?

மின்சார உற்பத்திக்கான நிலக்கரி இறக்குதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் வலு சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக எதிர்க் கட்சிகளால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று முன்தினம் 104 வாக்குகள் பெரும்பான்மையினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

அந்த பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டு அமைச்சர் ஜெயக்கொடி பதவிவிலக வேண்டிவரும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலம் இருப்பதனால் எந்த அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய நம்பிக்கையில்லாப் பிரேரணையும் வெற்றிபெறாது என்பதைக் கூறுவதற்கு எவரும் அரசியல் மேதையாக இருக்க வேண்டியதில்லை.

ஆனால், முன்னைய அரசாங்கங்கள் அவற்றின் அமைச்சர்கள் செய்ததாகக் கூறப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் அன்றைய எதிர்க்கட்சிகளினால் சபையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைகளை அவற்றின் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தித் தோற்கடித்து அவர்களைக் காப்பாற்றியதற்கும் தற்போது அமைச்சர் ஜயக்கொடி விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடந்துகொண்ட முறைக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதே இங்குள்ள முக்கியமான கேள்வி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிருவாகத்தில் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக மருந்து வகைகள் கொள்வனவில் முறைகேடுகள் தொடர்பில் அன்று தேசிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டபோது இன்றைய அரசாங்கத்தின் தலைவர்கள் எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தார்கள் என்பதை திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒரு கட்டத்துக்கு அப்பால் ரம்புக்வெலவை சுகாதார அமைச்சராக வைத்திருப்பது உகந்தது அல்ல என்று உணர்ந்த ஜனாதிபதி விக்கிரமசிங்க அவரை வேறு அமைச்சுப் பொறுப்புக்கு மாற்றியதும் அவர் தரங்குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் கைதாகி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருப்பதும் பின்னர் இடம்பெற்ற சம்பவங்கள்.

தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதன் விளைவாக நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் மின்சார உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க ஒத்துக் கொண்டார். ஆனால், அதே நிலக்கரியைக் கொள்வனவு செய்த நடைமுறைகளில் முறைகேடு எதுவும் இடம்பெறவில்லை என்று கூறி ஜனாதிபதி நிலக்கரி விநியோகஸ்தர்களை முழுக் குற்றத்துக்கும் பொறுப்பாளிகளாக்கிவிட்டார்.

ஜனாதிபதி இவற்றைக் கூறிய கையோடு நிலக்கரி கொள்வனவில் பாரதூரமான முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிக்கை அமைச்சர் ஜயக்கொடியை பாதுகாப்பதற்கு அரசாங்கத் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களின் பொள்ளலை அம்பலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

தரங்குறைந்த நிலக்கரியின் விளைவாக நுரைச்சோலையில் மின்சார உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியை ஈடுகட்டுவதற்கு மேலதிகமாக தேவைப்படும் டீசல் செலவைச் சமாளிக்க மின்கட்டணங்களில் மீண்டும் கடுமையான அதிகரிப்பைச் செய்ய வேண்டியிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. மக்கள் மீது தொடர்ந்தும் அவர்களால் தாங்க முடியாத சுமைகள் ஏற்றப்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், ஊழல்வாதிகளால் நிரம்பிவழிந்தவை என்று மக்கள் நிராகரித்த முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த அணுகுமுறைகளில் இருந்து வேறுபட்டதாக அமைச்சர் ஜயக்கொடியின் விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் ஏன் நடந்துகொள்ள முடியவில்லை?

புதிய அரசியல் கலாசாரம், முறைமை மாற்றம் என்று கூறியதெல்லாம் என்னவாயிற்று? முறைமை மாற்றம் இடம்பெற்றதோ இல்லையோ தேசிய மக்கள் சக்தி பழைய முறைமைக்கு தன்னை இசைவுபடுத்தக்கூடியதாக தன்னை மற்றியமைத்துக் கொண்டிருப்பதையே இன்று நாம் காண்கிறோம்.

# ரணில் ஒப்படைத்த பொருளாதாரம் இன்று அழிவின் விளிம்பில் உள்ளது

## ஐக்கிய தேசிய கட்சி கவலை

கொழும்பு, ஏப். 12

அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் ஆட்சி அதி காரத்தை கைப்பற்றுவதற்காக தொடர்ச்சியாக பொய்களை கூறி வருவதன் காரணமாகவே, இலங்கையின் பொருளாதாரம் இன்று பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதனைத் தொடர்வதால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஒப்படைத்த பொருளாதாரம் இன்று அழிவின் விளிம்பில் உள்ளது. இதே நிலைமை தொடர்ந்தால் இலங்கை மீண்டும் ஒரு காலனித்துவ நாடாக மாறுவதைத் தவிர்க்க முடியாது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ரணில் விக்கிரம சிங்கவின் அரசியல் அலுவல கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரலாற்றில் அதிக ளவு பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்த அரசாங்கமாக தற்போதைய ஆட்சி மாறியுள் ளது. 78 வருடகால வரலாற் றில் நாட்டை நிர்வகித்த கட்சிகள் சிலவற்றைச் செய்திருந்தாலும், தனிப்பட்ட பதவி ஆசைகளுக்காக மக்களை ஏமாற்றி, பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளனர். இனிமேலாவது பொய் சொல்வதை நிறுத்துவதே நாட் டுக்குச் செய்யும் மிகப் பெரிய உதவியாகும்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்ற போதெல்லாம் முறையான இலக்குகளுடன் செயல்பட்டார். நெருக்கடியான கால கட்டத்திலும் கூட எரிபொருள் விலைகள் மக்களால் தாங் கிக் கொள்ளக் கூடியளவுக்கு முகாமைத்துவம் செய்யப்பட் டன. ஆனால், இன்று அந்த நிலைமை இல்லை.
- என்றார். (எ)

# தேசிய அபிவிருத்தி வங்கியில் வாடிக்கையாளர் வைப்புகள் மிகவும் பாதுகாப்பாக உள்ளன

கொழும்பு, ஏப். 12

தேசிய அபிவிருத்தி வங்கியில் இடம்பெற்ற உள்ளக நிதி மோசடி தொடர்பில் தாம் மிக நெருக்கமாக அவதானித்து வருவதாகவும், வாடிக்கையாளர்களின் வைப்புகள் பாதுகாப்பாக இருப்பதாகவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள் ளது.

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில், இதுவரை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி தேசிய அபிவிருத்தி வங்கி போதிய மூலதனம் மற்றும் பணப்புழக்கத்தை கொண்டுள்ளதாகவும், அவை குறைந்தபட்ச ஒழுங்குமுறை தேவைகளை விட அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தினால் வாடிக்கையாளர் கணக்குகளுக்கோ அல்லது வைப்புகளுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் அவை பாதுகாப்பாக இருப்பதாகவும் மத்திய வங்கி உறுதிப்படுத்தியுள்ளது.

வங்கியின் ஸ்திரத்தன்மையை பேணவும், வைப்பு செய்தவர்க ளின் நலன்களை பாதுகாக்கவும் தேவையான அனைத்து நடவ டிக்கைகளையும் எடுக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ள மத்திய வங்கி, இது தொடர்பில் வங்கியுடனும் ஏனைய தரப்பினருடனும் தொடர்ச்சியான தொடர்புகளை பேணி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, தமது ஊழியர்கள் சிலரால் முன்னெடுக்கப்பட்ட சுமார் 13. 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான உள்ளக நிதி மோசடி ஒன்று கண்டறியப் பட்டுள்ளதாக தேசிய அபிவிருத்தி வங்கி வெளிப்படுத்தியிருந்தது.

இதன்போது வாடிக்கையாளர்களின் மீதிக் கணக்குகளில் எந்தவித மாற்றமும் ஏற்பட வில்லை எனவும், வங்கியின் செயல்பாடுகள் தடையின்றி முன்னெடுக்கப்படுவதாகவும் வங்கி நிர்வாகம் தெரிவித்திருந்தது. (எ)

# அதிகாரிகளை கைது செய்ய நீதிமன்று இடைக்கால தடை

கொழும்பு, ஏப். 12

பாதாள உலகக் குழுத் தலைவர் எனக் கூறப்படும் மாகந்துரே மதுஷ் கொலை சம்பவம் தொடர் பான விசாரணைகளுக்கு அமைவாக, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜனக் நந்தன உள்ளிட்ட நான்கு அதிகாரிகளைக் கைது செய்வதைத் தடுத்து, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப் பாளர் ஷானி அபேசேகரவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் பணியாற்றிய குறித்த அதிகாரிகளால் தாக்கல் செய் யப்பட்ட மனுவை பரிசீலித்த பின்னரே, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

மாகந்துரே மதுஷ் கொலை சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகவும், அது தொடர்பில் தாம் எந்நேரமும் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப் படக்கூடிய அபா யம் இருப்பதாகவும் மனுதாரர்கள் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப் பாளர் ஷானி அபேசேகரவின் வழிகாட்டலின் கீழ் இந்த விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும், இதன் மூலம் தமக்கு கடும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் மனு தாரர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனடிப்படையில், தம்மைக் கைது செய்வதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப் பிக்குமாறும், இந்த விசாரணையை குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடமிருந்து நீக்குமாறும் மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனா திபதி சட்டத்தரணி அலி சப்ரி முன்வைத்த சமர்ப் பணங்களை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவுகளை பிறப்பித்ததுடன், குறித்த வழக்கை மீண்டும் மே மாதம் 15ஆம் திகதி அழைப்பதற்கும் உத்தரவிட்டது.

இதற்கு மேலதிகமாக, பிரதி வாதிகளுக்கு அறிவித் தல் வழங் குமாறும் நீதியரசர் உத்தரவிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மருத்துவக் குறிப்புகளைத் தவிர்ப்போம்!

இரா. ஜெயசீலன்

உடல் எடையைக் குறைப்பதற்காக இணையம் மற்றும் யூ-டியூப் விடியோக்களைப் பார்த்து சுயமாக சிகிச்சை மேற்கொண்ட கேரளத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் 'அனரெக்சியா நெர்வோஸோ' என்ற மனநலன் சார்ந்த உணவு, பசியின்மை நோயால் பாதிக்கப்பட்டு அண்மையில் உயிரிழந்த செய்தி வருத்தத்தை தந்தது.

உடல் எடை குறித்த மனநோயான இந்த 'அனரெக்சியா நேர்வோஸோ' என்பது இந்தியாவில் 15 முதல் 19 வயதிலான ஒரு லட்சம் இளம்பெண்களில் 37.5 சதவீதம் பேருக்கு உள்ளதாக மருத்துவ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதேபோன்று இந்த வகை நோயால் கடந்த 2016-ஆம் ஆண்டு காலகட்டத்தில் மட்டும் சுமார் 55 இளம்பெண்கள் உயிரிழந்ததாக தரவுகள் தெரிவிக்கின்றன.


மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவர், உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 'வெண்காரம்' எனப்படும் வேதிப்பொருளை உட்கொண்டு உயிரிழந்தார்.

'போராக்ஸ்' எனப்படும் இந்த வேதிப்பொருள் பெரும்பாலும் பூச்சிக்கொல்லிகள், பீங்கான் தயாரிப்பு மற்றும் சலவைப் பொருள்களில் பயன்படுத்தப்படுவதாகும். மேலும், உடல் இளைப்பதற்காக 'படிகாரம்' உட்கொண்ட கேரள இளம்பெண் உடல் பாதிப்புக்குள்ளானார். படிகாரம் எனப்படுவது 'பொட்டாசியம் அலுமினியம் சல்பேட்' எனப்படும் வேதிப்பொருளாகும். இது போன்று இணையத்தைப் பார்த்து பிரசவம் பார்ப்பது, தவறான முறைகளில் உடற்பயிற்சிகள், தியானம், யோகா போன்றவற்றை பலரும் செய்து வருவது இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வருகிறது.

இன்று இணையத்துக்குள் சென்றாலே எண்ணற்ற மருத்துவக் குறிப்புகள் வருகின்றன. பலரும் மருத்துவம் படிக்காமலே மருத்துவம், மருத்துவ சிகிச்சைகள் குறித்துப் பேசுகின்றனர். இதில் சித்த மருத்துவம் மற்றும் மூலிகை மருத்துவம் குறித்து பலர் பேசுவது அதிகமாக உள்ளது.

ஆனால், இது குறித்துப் பேசுபவர்கள், மருத்துவத்தையும், பயிற்சிகளையும் மேற்கொண்டு பலனை அனுபவித்தவர்களா என்பது தெரியவில்லை. எல்லாக் குறிப்புகளையும் தெரிவித்துவிட்டு கடைசியில் தக்க மருத்துவ ஆலோசகர்களின் அறிவுரைப்படி பயன்படுத்த வேண்டும் என்ற வாசகத்தையும் பயன்படுத்துகிறார்கள்.

இணையவழி மருத்துவ முறைகள், உடற்பயிற்சி முறைகளைப்



பயன்படுத்துவர்கள் இந்த வாசகத்தை அலட்சியம் செய்துவிட்டு நேரடியாக செய்முறை பயிற்சியில் இறங்குவதுதான் இத்தகைய விளைவுகளுக்கு முதன்மைக் காரணங்களாக அமைகின்றன. சித்த மருத்துவம், மூலிகை மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவது தவறில்லை. ஒவ்வொரு நோய்க்கும் அதன் தன்மைக்கேற்ப அளவுகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை பாடல்கள் வாயிலாக சித்தர்கள் தெரிவித்துள்ளனர்.

உடல் பருமன் குறித்துப் பல்வேறு எதிர்மறையான செய்திகளை மருத்துவ உலகமும் சமூக ஊடகங்களும் பரப்பி வருவதுதான் இதற்கு முக்கியக் காரணமாகும். முதலில் பொதுமக்கள் ஒரு விஷயத்தை உணர வேண்டும். ஒல்லியாக இருப்பவர்கள் எல்லாம் முழுமையான ஆரோக்கியமானவர்களும் அல்லர் அதிக உடல் எடையுடன் இருப்பவர்கள் ஆரோக்கியமற்றவர்களும் அல்லர். இது அவர் குடும்ப மரபு வழி தன்மையாகக்கூட இருக்கலாம்.

அதற்காக உடல் எடையைக் குறைக்க சிலர் கூறும் தேவையற்ற அறிவுரைகளையும், மருத்துவக் குறிப்புகளையும் கேட்பதைத் தவிர்க்க வேண்டும். ஊடகங்களில் சிலர் கூறும் அனைத்து மருத்துவ முறைகளின் உண்மைத் தன்மையை யாரும் இதுவரை முழுமையாக அறிந்தது இல்லை. சிலர் புத்தகங்களில் தாங்கள் படித்த ஒருசில விஷயங்களை வைத்துக்கொண்டு அதன் மூலம் பொருள் ஈட்ட முயல்வதே இது போன்ற நிகழ்வுகளுக்குக் காரணமாகின்றன.

ஒரே மருந்தை காலையில் உட்கொண்டால் ஒரு பலனும், மாலையில் உட்கொண்டால் வேறு பலனும் கிடைக்கும் என சித்த மருத்துவ நூல்கள் தெரிவிக்கின்றன. இதையெல்லாம் முறையாக கற்றுத்தேர்ந்த சித்த மருத்துவர்கள் அல்லது மூலிகை மருத்துவ நிபுணர்களை நேரடியாக சந்தித்து உரிய தீர்வு பெறுவதே முறையாகும். மாறாக, சமூக ஊடகங்களில் வரும் மருத்துவம் சார்ந்த செய்திகளை முழுமையாக நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போன்றதாகும்.

சமூக ஊடகங்களில் ஆரோக்கியம் தொடர்பான தகவல்களை மேற்கொள்ள முயற்சிக்கும்போது, அதன் நம்பகத் தன்மையை ஆராய வேண்டும் அல்லது நிபுணர்களை அணுகுவது அவசியம். சமூக ஊடகங்கள் பல நல்ல விஷயங்களையும் நமக்குத் தருகின்றன. அதே நேரத்தில், மருத்துவம் சார்ந்த செய்திகளை உடனடியாக அப்படியே பின்தொடர்வது தவறான ஒன்றாகும்.

உடல் அமைப்புகள் நம் உற்சாகத்தை உயர்த்துவதில்லை. நம்முடைய மனம் சார்ந்த எளிய உணர்வுகளும், உடற்பயிற்சி போன்ற முறைகளே நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்க பெரிதும் உதவுகின்றன. உடல் அமைப்பு என்பது, நமது மூதாதையர்களின் பாரம்பரிய மரபணுக்கள் மற்றும் மரபுவழி தன்மைகளைப் பொருத்தது. அதை தவறான செய்திகள் வாயிலாக நம்மை நாமே சிதைத்துக் கொள்ளக் கூடாது.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 12.04.2026 - 18.04.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 18
நல்ல நேரம்: 7.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் ஏமாற்றம் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகமாக இருக்கும், புதிய முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த மனக்கசப்பு நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷபம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போராட்டம் இருக்கும் இருக்கும், சில இடங்களில் சவால்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு உயரும், புதிய முயற்சிகளில் நம்பி இறங்கலாம். கு பிள்ளைகளால் எந்த தொந் தரவும் இருக்காது. குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளால் பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்பு இல்லை.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பண வரவு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நீங்கி சந்தோசம் உண்டாகும், பிள்ளைகளால் குதூகலம் அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் இருக்கும், சில இடங்களில் உழைப்பு அதிகம் இருக்கும்.வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வங்கி இருப்பு உயரும், புதிய முயற்சிக ளில் நம்பி ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கி சந்தோசம் உண்டாகும், பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்திற்காக பண வரவை அதிகரிக்க அக்கறை காட்ட வேண்டும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிக்கல் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பண இருப்பு உயரும், புதிய முயற்சிகளில் விரும்பி ஈடுபடலாம். குதூகலம் கொண்டாட்டம் அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும், சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் மறையும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் கிடைக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் விரைவாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் கையிருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி கலகலப்பு அதிகரிக்கும், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிரமங்கள் விலகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் அதிர்ஷ்டகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும், சில இடங்களில் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் வங்கி இருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக நல்ல பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமமான நிலை உண்டாகும், சில இடங்களில் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடுமாற்றமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை அதிகரிக்கும், புதிய தொழிலில் தைரியத்தோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கி குதூகலம் அதிகரிக்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சியும் மன நிம்மதியும் உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தமான நிலை உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு கிடைக்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சீக்கிரமாகவே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமையும் சிறப்பு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## றிச்சர்ட் நிக்சனின் 'பைத்தியக்காரன் கோட்பாட்டை'

# நினைவுக்குக் கொண்டுவரும் டொனால்ட் ட்ரம்பின் நடவடிக்கைகள்!



வீரகத்தி
தனபாலசிங்கம்

போரின் போக்குகள் குறித்து அமெரிக்காவும் ஈரானும் வெவ்வேறு வியாக்கியானங்களைச் செய்துகொண்டிருந்த போதிலும், இரு நாடுகளுக்குமே போர் நிறுத்தம் ஒன்றுக்கு இணங்க வேண்டிய அவசரமும் அவசியமும் இருந்தது என்பதே உண்மை. ஆனால், அறிவிக்கப்பட்டிருக்கும் இரு வாரகால போர் நிறுத்தம் சஞ்சலமான ஒன்றாகவே இருக்கிறது.

போர்நிறுத்த ஏற்பாட்டிற்குள் லெபனான் உள்ளடங்கவில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு மாத்திரமல்ல, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் கூட கூறிய அதேவேளை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீவ் லெபனானும் போர் நிறுத்தத்திற்குள் வருவதாக 'எக்ஸ்' சமூக ஊடகத்தில் செய்த பதிவில் கூறியிருந்தார்.

போர்நிறுத்த அறிவிப்பு வெளியான பிறகு கடந்த புதன்கிழமை மாலைக்குள் பத்து நிமிடங்களில் லெபனான் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் 100 தடவைகள் நடத்திய தாக்குதல்களில் 250 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

போர்நிறுத்தத்தை தனது நாட்டிலும் நடைமுறைப்படுத்துமாறு லெபனான் பிரதமர் நவாஸ் சலாம் பாகிஸ்தான் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்த அதேவேளை நெதான்யாகு லெபனான் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு தனது அமைச்சரவைக்கு உத்தரவிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகின.

லெபனான் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தாவிட்டால் போர்நிறுத்த நிபந்தனைகளுக்கு இணங்க முடியாது என்று அறிவித்த ஈரான், ஹோர்முஸ் நீரிணையை திறந்துவிட மறுத்து விட்டது. ஈரானின் அனுமதியுடனும் கட்டணத்தைச் செலுத்தியும் மாத்திரமே நீரிணையை கப்பல்கள் கடந்துசெல்லக்கூடிய நிலையே இன்னமும் தொடருகிறது.

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளுக்கு பாகிஸ்தான் ஏற்பாடுகளை செய்கின்ற போதிலும், அமெரிக்கா மத்திய கிழக்கில் அதன் 'அடங்காக் குதிரையான' நெதான்யாகுவை கட்டுப்படுத்தாத பட்சத்தில் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு இராஜதந்திர முயற்சியும் பயனளிக்கப் போவதில்லை.

போர் நிச்சயமற்ற ஒரு புதிய கட்டத்திற்குள் பிரவேசிக்கிறது என்பதே சர்வதேச இராணுவ மற்றும் அரசியல் அவதானிகளின் பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது. இரு வாரங்களுக்கு போர்நிறுத்தம் நீடிக்குமா என்பதும் கேள்விக் குறியே.

போர்நிறுத்த அறிவிப்பு வெளிவருவதற்கு முன்னர் கடந்த சில நாட்களாக டொனால்ட் ட்ரம்ப், துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் ஆகியோர் இரத்த வெறிகொண்டு கனவுலகில் இருந்து பேசுவது போன்று வெளியிட்ட கருத்துக்கள் விளைவுகளைப் பற்றிய கவலை இன்றி உலகில் தாங்கள் நினைத்ததை செய்யமுடியும் என்ற மமதையில் அவர்கள் இருப்பதை வெளிக்காட்டுகின்றன.

தனது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உடன்பாடொன்றுக்கு வந்து ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்காவிட்டால் " ஈரானின் முழு நாகரிகமுமே அழிந்து போகும்" என்று ட்ரம்ப் செவ்வாய்க்கிழமை இரவு சமூக ஊடகத்தில் எச்சரிக்கை செய்தார். நீரிணை திறக்கப்படாவிட்டால் செவ்வாய்க்கிழமை, "மின்உற்பத்தி நிலையங்களையும் பாலங்களையும் அழிக்கும் நாளாக இருக்கும்.... நீரிணையத் திறவுங்கள் அல்லது நீங்கள் நரகத்தில் வாழவேண்டியிருக்கும்" என்றும் அவர் கூறினார். நாகரிகத்தை அழிப்பதென்பது இனவழிப்பைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? இதன் மூலம் மனிதகுலத்தின் விரோதியாக தன்னைத் தானே உலகிற்கு அம்பலப்படுத்தி நிற்கிறார் ட்ரம்ப்.


ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு பதிலளித்த தெஹ்ரான், அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் பல வருடங்களுக்கு எண்ணெயும் எரிவாயுவும் கிடைக்காமல் போகும் என்று எச்சரிக்கை செய்தது. அமெரிக்கா முன்வைத்திருக்கும் 15 அம்ச யோசனைக்கும் ஈரானின் 10 அம்சத் திட்டத்துக்கும் இடையில் பெரிய அகலமான இடைவெளி இருக்கிறது.


அதேவேளை, இதுவரையில் தாங்கள் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்காத கருவிகள் தனது நாட்டிடம் இருப்பதாக அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் ஹங்கேரிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது கூறியிருந்தார். அவர் அதை விபரமாகக் கூறவில்லை என்ற போதிலும், அணுவாயுதங்களைப் பயன்படுத்தும் அர்த்தத்தில் அவரது கருத்துக்கள் அமைந்திருக்கவில்லை என்று வெள்ளை மாளிகை பிறகு ஒரு விளக்கத்தைக் கூறியது.


பாதுகாப்பு அமைச்சர் பீட் ஹெக்செத் ஈரானுக்கு எதிரான "காவியச் சீற்றம் " இராணுவ நடவடிக்கை 'பக்தியற்றவர்களின் பற்களை உடைப்பதற்கான 21 ஆம் நூற்றாண்டின் சிலுவைப்போர்" என்று வர்ணித்தார்.


இவர்கள் எல்லோரும் பென்டகனில் இருந்து உலகம் பூராவும் மரணத்தையும் அழிவையும் கட்டவிழ்த்து விடும் அதிகாரத்தைக் கொண்டவர்கள் போன்று நாகரிக உலகம் வெறுக்கத்தக்க மிகவும் கேவலமான வார்த்தைகளைப் பயன்படுத்தி அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறார்கள்.

உண்மையில் ட்ரம்பும் அவரைச் சார்ந்தவர்களும் பேரழிவைச் செய்யப் போவதாக விடுக்கும் அச்சுறுத்தல்களை வலிமையின் அடையாளமாக அன்றி, மூலோபாயப் பலவீனமாகவே நோக்கவேண்டும். மனிதப் பண்புகளுக்கு எந்தவிதத்திலும் பொருந்தாத தரம்தாழ்ந்த சொற்கள் நிறைந்தவையாக ட்ரம்ப் வெளியிடும் அச்சுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தபடுமானால், அவை போர்க் குற்றங்களாகவே கருதப்படும்.







ஜெனீவா சாசனங்கள் குடிமக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதை தடை செய்கின்றன. சர்வதேச சட்டங்களைப் பற்றி தனக்கு அக்கறையில்லை என்று பகிரங்கமாக பிரகடனம் செய்கின்ற ஒரு ஜனாதிபதி ஜெனீவா சாசனங்களை மதித்துப் போர் செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது.

உக்ரெய்ன் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீது தாக்குதல்களை நடத்திய ரஷ்ய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிற்பித்திருக்கிறது. மக்களை அச்சுறுத்தவும் அவர்களின் மனவுறுதியைச் சிதைக்கவும் நகரங்கள் மீது ஏவுகணைகளை வீசுவது போர்க் குற்றமாகும். இதே விதிதான் அமெரிக்காவுக்கும் பொருந்தும். ஈரானைக் கற்காலத்துக்கு கொண்டு செல்லப் போவதாக ட்ரம்ப் விடுக்கும் அச்சுறுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது மனித குலத்திற்கு எதிரான குற்றமேயாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானுக்கு எதிராகத் தொடுத்த இந்த சட்டவிரோதமான போர் இதுவரை அறியப்படாத மோசமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய பேரழிவுக் கட்டத்தை எட்டாது என்று நம்புவதைத் தவிர, உலக நாடுகளுக்கு வேறு வழியில்லை. ஐக்கிய நாடுகள் சபையினால் எதையும் செய்ய முடியாமல் இருக்கும் நிலையில், தனது சொல்லைக் கேட்டு நடக்கக்கூடிய பாகிஸ்தானின் மத்தியஸ்தத்தில் ஈரானுடன் பேசுவதற்கு ட்ரம்ப் முன்வரு வது இன்றைய உலக ஒழுங்கின் இலட்சணத்தை வெளிக்காட்டுகிறது.

ஈரானின் இராணுவத் திறனை அழித்து விட்டதாக ட்ரம்ப் தற்பெருமை பேசினாலும் ஹோர்முஸ் நீரிணை தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதே அது ஒரு வெற்று [illegible] மூலோ [illegible] பாடோ இல்லாத ட்ரம்பின் இந்த முட்டாள்தனமான போரை ஆதரிக்க அமெரிக்காவின் நேசநாடுகள் திட்டவட்டமாக மறுத்து விட்டன.

ட்ரம்ப் முன்னுக்குப்பின் முரண்பாடாகச் செயற்படுகின்றார். இராணுவ வல்லமை அழிக்கப்பட்டுவிட்ட ஒரு நாட்டுடன் போர்நிறுத்தம் செய்வதற்கு இணங்குவது என்பது அவரின் அந்த முரண்பாடுகளின் ஒரு உச்சம் எனலாம். கோடிக்கணக்கான உயிர்களும் உலகப் பொருளாதாரத்தின் எதிர்காலமும் தனது சுயநல உள்ளுணர்வுகளினாலும் தன்னைச் சுற்றியுள்ள துதிபாடிகளினாலும் வழிநடத்தப்படும் ஒரு அமெரிக்க ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புக்களைச் சார்ந்திருந்திருக்கும் ஒரு உலகில் இன்று நாம் வாழ்கிறோம். போர்க் குற்றங்களைச் செய்யும் தங்கள் நோக்கத்தைப் பற்றி ட்ரம்ப் கும்பல் பகிரங்கமாக பெருமை பேசிக்கொள்கிறது.

சினமூட்டும் வகையில் அட்டகாசமாகவும் ஆபாசத்தனமாகவும் பேசுவதும் இனவழிப்பு அச்சுறுத்தல்களை விடுப்பதும் தான் வகிக்கும் பதவிக்கு இழுக்கு என்பதுடன் சர்வதேச இராஜதந்திரத்தில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதையும் தானாகவே சிக்கிக் கொண்ட இடர்பாட்டில் இருந்து விடுபட வேண்டுமானால் தனது வாயை அடக்கிப் பேசவேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளக்கூடிய மனநிலை ட்ரம்புக்கு இருக்கிறதா என்பது சந்தேகமே.

நிமிடத்துக்கு நிமிடம் முன்னுக்குப் பின் முரணாக அறிவிப்புக்களைச் செய்கின்ற ட்ரம்பின் சுபாவம் குறித்து விமர்சனங்களை முன்வைக்கும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களில் சிலர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றிச்சர்ட் நிக்சன் கடைப்பிடித்ததாகக் கூறப்படும் 'பைத்தியக்காரன் கோட்பாட்டை' (**Madman Theory**) நினைவுபடுத்துகிறார்கள்.

அதாவது, ஒரு நாட்டின் தலைவர் தனது மனநிலை பற்றி எதிரிகளுக்குச் சந்தேகம் வரும்படி நடந்து கொள்வதும், தான் எதையும் செய்யத் துணிந்த ஒரு பைத்தியக்காரன் என்று எதிரிகளை நம்பவைப்பதன் மூலம் அவர்களைப் பயமுறுத்தி சாதகமான சமரசங்களுக்கு கொண்டுவருவதும்தான் அந்த 'பைத்தியக்காரன் கோட்பாட்டின்' சாராம்சமாகும்.

ஜனாதிபதியாக வருவதற்கு முன்னதாக 1968 ஆம் ஆண்டில் பசுபிக் சமுத்திரத்தின் கரையோரத்தில் தனது வருங்கால வெள்ளை மாளிகை தலைமை அதிகாரி பொப் ஹால்ட்மேனிடம் நிக்சன் இந்த கோட்பாடு குறித்து விபரித்ததாகவும் அதன் மூலம் வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று நம்பியதாகவும் ஐரிஷ் புலனாய்வுப் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான அந்தோனி சம்மர்ஸ், "அதிகாரத்தின் செருக்கு" என்ற தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதை வாஷிங்டனில் உள்ள 'த கார்டியன்' பத்திரிகையின் செய்தியாளர் றொபேர்ட் ரெய்ட் கடந்த வாரம் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

"பொப், இதை நான் 'பைத்தியக்காரன் கோட்பாடு என்று அழைக்கிறேன். போரை நிறுத்துவதற்காக எதையும் செய்யத் துணிந்த நிலைக்கு வந்துவிட்டேன் என்று வட வியட்நாமி யர்கள் நம்பவேண்டும் என்று நான் விரும்புகிறேன்." கடவுள் மேலா ணையாக, நிக்சனுக்கு கம்யூனிஸ்டுகள் மீது எவ்வ ளவு வெறி என்று உங்களுக்குத் தெரியும். அவர் கோபமாக இருக் கும்போது எங்களால் அவரைக் கட்டுப்படுத்த முடியாது. - அணு வாயுதப் பொத்தான் அவர் கையில் இருக்கிறது" என்ற தகவலை மட்டும் அவர்களின் காதுக்குக் கொண்டுசெல்லுங்கள். அடுத்த இரு வாரங்களில் ஹோ சி மின் தானா கவே பாரிஸுக்கு வந்து சமாதானத்துக்காக கெஞ்சுவார்" என்று நிக்சன் பொப் ஹால்ட் மேனிடம் கூறியதாக சம்மர்ஸ் தனது நூலில் எழுதியிருக்கிறார்.

"அடுத்தடுத்த வருடங்களிலும் நிக்சன் இந்த உத்தியை திரும்பத் திரும்பப் பயன்படுத்தினார். தனது உதவியாளர்களிடம் தான் 'சற்றே பைத்தியக்காரன்' என்றும் கொடூரமான வன்முறையில் ஈடுபடக்கூடி யவர் என்றும் சோவியத் அதிகாரிகளிடம் தெரிவிக் குமாறு நிக்சன் தனது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நடிகர் விஜய்யின் கட்சி ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டிய நிலையில் தமிழக கட்சிகள்!



கவிதா முரளிதரன்

2021ஆம் ஆண்டு வரையிலான பல தசாப்தங்களாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மறைந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) தலைவரான மு.கருணாநிதியின் நிழலில் காத்திருக்கும் ஒரு தலைவராகவே நோக்கப்பட்டார். அதனால், 2026 சட்டசபைத் தேர்தல் அவருக்கும் தி.மு.க. விற்கும் ஒரு தனித்துவமான - தனிப்பட்ட மைல்கல்லாக அமைகிறது.

73 வயதான முதலமைச்சர் தனது முதல் பதவிக்காலத்தை நிறைவு செய்துள்ளார். இரண்டாவது முறையும் ஆட்சியைப் பிடிக்க அவர் மேற்கொள்ளும் முயற்சி, அவரது ஆட்சியின் செயற்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

2021 ஆம் ஆண்டு வரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க.) ஆட்சியில் இருந்தபோது, தி.மு.க. பத்து ஆண்டுகளை வனவாசத்தில் கழித்தது. அது ஒரு மாற்றத்திற்கான காலமாகவும் இருந்தது. 2018 ஆம் ஆண்டில் கருணாநிதி காலமானார், ஸ்டாலின் கட்சித் தலைமையை மட்டுமல்லாமல், தேர்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான சிக்கலான சவால்களையும் மரபுரிமையாகப் பெற்றார்.

அவர் அந்த சவால்களை திறமையாக வெற்றி கொண்டார். 234 ஆசனங்களைக் கொண்ட சட்டசபையில் 2021 ஆம் ஆண்டில் தி.மு.க. 133 ஆசனங்களைப் பெற்றது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஒட்டுமொத்தமாக 159 ஆசனங்களை வென்றது. அ.தி.மு.க.வின் ஆசனங்கள் 66 ஆகக் குறைக்கப்பட்டது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சொல்லாடல்கள் தொடர்ச்சியை உணர்த்தினாலும், மாற்றம் தெளிவாகத் தெரிகிறது. நலத்திட்ட உதவிகள், சமூக நீதி மற்றும் உறுதியான கூட்டாட்சி நிலைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய 'திராவிட மாடல' ஆட்சியை ஸ்டாலின் நிலைநிறுத்தியுள்ளார்.

2026 தேர்தல் அறிக்கையானது இதனை 'திராவிட மாடல் 2.0' என்று முன்னிலைப்படுத்துகிறது. இப்போது அதன் அளவு மற்றும் மக்களைச். சென்றடைதலில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட அல்லது விரிவுபடுத்தப்பட்ட முதன்மைத் திட்டங்கள் தி.மு.க.வின் பரப்புரைக்கு முதுகெலும்பாக உள்ளன.

அவற்றில கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்: குடும்பத் தலைவிகளுக்கு நேரடிப் பணப் பரிமாற்றம் வழங்கும் திட்டம், மகளிருக்கு இலவசப் பேருந்து பயணம், பள்ளி மாணவர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாணவிகளின் உயர் கல்விக்கு ஆதரவு அளித்தல், நான் முதல்வன் திட்டம், இளைஞர்களின் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துதல், மக்களைத் தேடி மருத்துவம், வீட்டு வாசலுக்கே வரும் சுகாதாரத் திட்டம் ஆகியவை அடங்கும்.

இந்தத் திட்டங்கள் சாதி மற்றும் வர்க்க பாகுபாடுகளைக் கடந்து பயனாளிகளின் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் சுமார் 1.31 கோடி பெண்கள் பயனடைந்துள்ளதாக தி.மு.க. அரசு கூறுகிறது. மேலும், 2024-25 நிதியாண்டில் 11.2 சதவீத வளர்ச்சி விகிதத்தை (இது 14 ஆண்டுகளில் இல்லாத உச்சம் என்பதுடன் தேசிய சராசரியை விட இரு மடங்கு அதிகம்) சான்றாகக் காட்டி, நலத்திட்ட விரிவாக்கம் பொருளாதாரச் செயற்பாடுகளைப் பாதிக்கவில்லை என்று தி.மு.க. வாதிடுகிறது.

2021 ஆம் ஆண்டின் வெற்றி வாய்ப்பு மிகக் குறைவாக இருந்த பகுதிகளில் நலத் திட்டங்களைக் கொண்டுசென்று சேர்ப்பதில் தற்போது கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்தத் தேர்தலை மத்திய-மாநில உறவுகளுக்கு இடையிலான ஒரு பெரிய போராட்டத்தின் ஒரு பகுதியாக தி.மு.க. கட்டமைத்துள்ளது. இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்திற்குள் தமிழ்நாட்டின் தன்னாட்சி உரிமையைப் பாதுகாக்கும் ஒரு காவலனாக திராவிடக் கட்சி தன்னை நிலை நிறுத்திக் கொள்கிறது.

ஸ்டாலினின் அரசியல் செய்திகளில் கூட்டாட்சித் தத்துவம் ஒரு முக்கியத் தூணாகத் தொடர்கிறது. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்ரி) வருவாயில் மாநிலங்களுக்கான பங்கை அதிகரிப்பது உள்ளிட்ட கூடுதல் நிதிப் பகிர்வுக்கான கோரிக்கைகளை தி.மு.க. மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டம், தேசியக் கல்விக் கொள்கை ஆகியவற்றை எதிர்ப்பதுடன், உயர்கல்வியில் 'நீட்" போன்ற மத்திய நுழைவுத் தேர்வுகளை இரத்து செய்ய வேண்டும் என்றும் தி.மு.க. கோரியுள்ளது.

உண்மையில், கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தொடர்ந்து வாதிடும் தி.மு.க., இந்தித் திணிப்புக்கு எதிரான தனது நீண்டகால நிலைப்பாட்டையும் உறுதிபடத் தெரிவித்துள்ளது. இந்த நிலைப்பாடுகள் புதியவை அல்ல என்றாலும், தற்போதையச் சூழலில் அவற்றிற்கு அளிக்கப்படும் கூடுதல் முக்கியத்துவம் ஒரு மூலோபாய நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இந்தத் தேர்தலை "தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும்" இடையிலான போட்டியாகச் சித்தரிப்பதன் மூலம் மாநிலத்தின் பிராந்திய அடையாளத்தை ஒருங்கிணைக்கவும் தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் (பாஜ.க.) வின் விரிவாக்க முயற்சிகளை முறியடிக்கவும் தி.மு க. முயற்சிக்கிறது. ஸ்டாலினின் மகனும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் இந்தத் தேர்தலை "நமது முதலமைச்சருக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான போட்டி" என்று அழைக்கும் அளவிற்குச் சென்றுள்ளார்.

தி.மு.க.வின் முதன்மைச் சவாலாக அதன் பழைய எதிரியான அ.தி.மு.க. விளங்குகிறது. முன்னாள் முதலைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க, பா.ஜ.க.வுடன் சுமுகமற்ற ஒரு உறவையே கொண்டிருக்கிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மீண்டும் இணைந்த போதிலும், அக்கூட்டணியில் ஒரு மேலாதிக்க சக்தியாகத் தன்னைத் தக்கவைத்துக் கொள்ள அ.தி.மு.க. கடுமையாகப் போராடி வருகிறது. கூட்டணிச் சிக்கல்களில் இருந்தும் அது தப்பவில்லை.



திராவிட மாடல் ஆட்சியைத் தக்கவைப்பது ஸ்ராலினுக்குச் சவால் தி.மு.க. விற்கு எதிரான வாக்குகளை ஒருங்கிணைப்பது எடப்பாடி பழனிச்சாமிக்கு சவால்

மறைந்த விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகமும் (தே.மு.தி.க.) கலகக் குரல் எழுப்பிய முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வமும் தி.மு.க. அணிக்கு மாறியுள்ளனர். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான வி.கே. சசிகலா தனது சொந்த அரசியல் கட்சியைத் தொடங்கி, (பா.ம.க.) நிறுவனர் டாக்டர் எஸ். ராமதாஸுடன் கைகோர்த்திருக்கிறார். அதேவேளை, ராமதாஸின் மகன் அன்புமணி ராமதாஸ் தலைமையிலான ஒரு பிரிவினர் அவரைத் தனிமைப்படுத்திய நிலையில் அவர் தவித்து வருகிறார்.

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் நீடிக்கும் அன்புமணி அணிக்கு 18 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சசிகலாவின் உறவினர் டி.டி.வி. தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தனது பிணைப்பைத் தொடர்ந்து 11 இடங்களில் போட்டியிடுகிறது.

குறிப்பிடத்தக்க வகையில், அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள சில சிறிய கட்சிகள் பா.ஜ.க.வின் தாமரைச் சின்னத்தில் போட்டியிடுகின்றன. இது ஒரு அசாதாரணமான நடவடிக்கையாகவும், மாறிவரும் அரசியல் சீரமைப்புகளின் அறிகுறியாகவும் பார்க்கப்படுகிறது. இந்த கட்சிகளில் பல, அ.தி.மு.க. வை விட பா.ஜ.க.விடமே அதிக பணிவு காட்டுகின்றன.

பா.ஜ.க. வின் தேசியத் தலைவர்கள் எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சர் வேட்பாளராகப் பெயர் குறிப்பிட்டு அழைப்பதைத் தவிர்ப்பதும் இத்தகைய பிம்பத்தை வலுப்படுத்தியுள்ளது.

இதன் காரணமாகவே, அ.தி.மு.க.வை 'வடக்கத்தைய' பா.ஜ.க. விடம் அடிபணிய வைத்துவிட்டார் என்று எடப்பாடி பழனிசாமி மீது கடுமையான விமர்சனங்கள் எழுகின்றன. முதலமைச்சர் ஸ்டாலின் இதனை "அடிமைச் சாசனம்" என்று கடுமையாகச் சாடிவருகிறார்.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் (த.வெ.க.) ஒரு புதிய திருப்பமமாக விளங்குகிறது.

தி.மு.க. - அ.தி.மு.க. என்ற இருமுனைப் போட்டியைத் தாண்டி, வாக்கு விகிதத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சக்தியாக நடிகர் விஜய்யின் த. வெ. க. உருவெடுத்திருக்கிறது. சில கருத்துக் கணிப்புகளின் பிரகாரம், இந்த கட்சி இரட்டை இலக்க வாக்கு விகிதத்தைப் பெறக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய சாதனையாகக் கருதப்படும்.

ஆனால், மூத்த பத்திரிகையாளர் பிரியன் சீனிவாசன் இது குறித்துக் கூறுகையில், விஜய்யைச் சுற்றியுள்ள அரசியல் நகர்வுகள் கணிக்க முடியாதவை என்கிறார்.

"அவரது கூட்டங்களுக்குப் பெரும் திரளான மக்கள் வருகின்றனர். ஆனால், அவர் யாருடைய வாக்குக ளைப் பிரிப்பார் என்பதே முக்கியமான கேள்வி. அ.தி.மு.க. விற்குச் செல்ல வேண்டிய தி.மு.க. எதிர்ப்பு வாக்குகளா? தி.மு.க. விற்குச் செல்லும் சிறுபான்மையினர் வாக்குகளா? அல்லது கடந்த 2021 ஆம் ஆண்டில் சீமானின் நாம் தமிழர் கட்சி (நா.த.க.) பெற்ற 6.6 சதவீத இளைஞர் வாக்குகளா? பிரிக்கப்படப்போகிறது என்பது இன்னும் புதிராகவே உள்ளது" என்று அவர் குறிப்பிடுகிறார்.

தமிழக அரசியல் என்பது மத துருவமுனைப்பை விட சாதி கூட்டணிகள், பிராந்திய சீரமைப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் மூலமாகவே தீர்மானிக்கப்படுகிறது. தி.மு.க. கூட்டணி வழக்கமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர், சிறுபான்மையினர் மற்றும் பெரியாரியக் கொள்கையுடைய நகர்ப்புற வாக்காளர்களின் ஆதரவைப் பெறுகிறது.

மேற்கு தமிழகத்தில் (கொங்கு மண்டலம்), கொங்கு வெள்ளாள கவுண்டர்கள் பாரம்பரியமாக அ.தி.மு க.வை ஆதரித்து வருகின்றனர். அண்மைக்காலமாக தி.மு.க. இங்கு ஊடுருவ முயன்றாலும், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த எடப்பாடி பழனிசாமியின் இருப்பு அ.தி.மு.க. விற்கு ஒரு பாதுகாப்பைத் தருகிறது.

ஆனால், இந்த கவுண்டர் மையத் தலைமை, தெற்கு மாவட்டங்களில் உள்ள தேவர் சமூகத்தினரிடையே ஒரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அ.தி.மு.க.வில் தங்களின் முக்கியத்துவம் குறைந்துவிட்டதாக அந்த சமூகத்தினர் கருதுகின்றனர். இந்த இடைவெளியை நிரப்பவே, தேவர் சமூக வாக்குகளைக் கொண்ட டி.டி.வி. தினகரனின் அ.ம.மு.க..வுடன் கூட்டணியை அ.தி.மு.க. ஏற்படுத்தியிருக்கிறது.

வட மாவட்டங்களில் பா.ம.க. வின் பிளவு காரணமாக வன்னியர் சமூக வாக்குகள் சிதறடிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் 30 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மொத்த வாக்காளர்களில் சுமார் 20.7 சதவீதமாக் (1.17 கோடி பேர்) உள்ளனர். இவர்கள் வழக்கமான அரசியல் முறைகளைத் தாண்டி வாக்களிக்கும் போக்கைக் கொண்டவர்கள். கடந்த முறை நாம் தமிழர் கட்சியின் தமிழ் தேசியவாதத்தால் ஈர்க்கப்பட்ட இவர்கள், இந்த முறை விஜய்யின் பக்கம் சாய வாய்ப்புள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு, அனைத்துக் கட்சிகளும் டிஜிட்டல் பிரசாரத்தில் தீவிரமாக உள்ளன. முதலமைச்சர் ஸ்டாலின், ஜென்-இசட் இளைஞர்களுடன் உரையாடும் இன்ஸ்டாகிராம் நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். தி.மு.க. 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற பெயரில் புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணியிலும் தி.மு.க. ஈடுபட்டுள்ளது.

வழக்கம்போல, இரு திராவிடக் கட்சிகளும் இலவசங்கள் மற்றும் சலுகைகளை அறிவிப்பதில் போட்டி போடுகின்றன. மறுபுறம், எதிர்க்கட்சிகள் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைத் தங்களின் முக்கிய பிரசார ஆயுதமாக முன்னெடுத்துள்ளன.

2026 தேர்தல் தமிழக அரசியலில் ஒரு மாற்றத்திற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளது. திராவிடக் கட்சிகள் இன்னமும் ஆதிக்கம் செலுத்தினாலும், புதிய சக்திகளும் ஒரு தேசியக் கட்சியும் மெதுவாக இடம்பிடிக்க முயல்கின்றன. தி.மு.க.விற்குத் தனது 'திராவிட மாடல்' ஆட்சியைத் தக்க வைப்பதே சவால் அ.தி.மு.க.விற்கு ஆளும் கட்சிக்கு எதிரான வாக்குகளை ஒருங்கிணைப்பதே இலக்கு.

இத்தகைய சூழ்நிலையில் விஜய்யின் கட்சி ஏற்படுத்தும் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளும் தயாராக வேண்டியிருக்கிறது. 2026 தேர்தல் தீர்ப்பு தமிழக அரசியலின் அடுத்தகட்டப் பயணத்தைத் தீர்மானிக்கும் என்பதில் ஐயமில்லை. (இன்டியா ருடே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் இலக்கும் ரில்வின் சில்வா எதிர்பார்க்கும் காலநீட்சியும்!

பனங்காட்டான்



தமிழ்த் தேசியகட்சிகளை இணைப்பதற்கான இன்னொரு முயற்சியை புதிதாக உருவாகியுள்ள ஒரு கூட்டு ஆரம்பித்துள்ளது. இதன் பெயர் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை.

இனப்பிரச்சனைக்கான தீர்வு, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருமித்த நிலைப்பாட்டில் கொண்டுவருவதே இந்தப் புதிய பேரவையின் நோக்கம் என்று ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்காக அக்கறையுள்ள தமிழ்ச் சட்டத்தரணிகள் ஒன்று சேர்ந்து தம்மைஒரு பேரவை ஆக்கியுள்ளனர்.

கடந்த காலங்களில் மட்டுமன்றி நிகழ் காலத்திலும் பேரவை என்ற சொற்பதம் நன்கு பிரபல்யமானது. தமிழ்த் தேசிய பேரவை என்று சிலமாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அமைப்பு இன்னமும் இயங்கிவருகிறது. அதுவேறு, இப்போது உருவாகியுள்ள தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை வேறு.

சட்டத்தரணிகள் பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரான இரண்டாவது சந்திப்பு கடந்த வியாழக்கிழமை 9ம் திகதி கொழும்பில் மூடிய அறைக்குள் இடம்பெற்றுள்ளது. இதனால் இணைய வழியில் பங்கேற்கவிரும்பியவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியஅரசியல் கட்சிகள் மட்டுமே பங்குபற்றுவதாக இந்தப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய என்றபதம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளையும், முன்னாள் ஆயுதக் குழுக்கள் சிலவற்றையும் சேர்த்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய பின்னரே உலகளாவிய ரீதியில் பிரபல்யமானது. இக்கூட்டமைப்பில் ஆரம்பத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் மட்டுமே அரசியல் கட்சிகளாக இடம்பெற்றிருந்தன. பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் இடத்தை தமிழரசுக் கட்சி தனதாக்கியது. ஆனால்,கடந்த பதினாறு ஆண்டுகளில் பலபிளவுகளையும், வெடிப்புகளையும் சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பின்னர் வெவ்வேறானது.

இப்போது காலத்தின் தேவையை உணர்ந்து மீண்டும் ஓர் இணைப்பு தமிழ்த் தேசியம் என்றபெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி எண்ணியவாறு வெற்றிபெறவேண்டுமென பலரும் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்த் தேசியகட்சிகள் அனைத்தினாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் ஒன்றை தயாரிக்கும் பணிக்காக சட்டத்துறையினர் ஐந்து பேரையும்,கட்சிகளின் பிரதிநிதிகள் ஐந்துபேரையும் கொண்ட குழு ஒன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூத்தசட்டத்தரணி கனகஈஸ்வரன் மற்றும் புகழ்பெற்ற சட்டத்தரணிகளான செல்வகுமாரன், தமிழ்மாறன், குருபரன், கலாநிதி சிவகுமார் ஆகியோர் சட்டத்தரணிகள் சார்பில் இக்குழுவில் இடம்பெறுகின்றனர். இவர்கள் ஐவரையும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையே தெரிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணியாகவுள்ள கனகஈஸ்வரன் இலங்கையில் பிரபல்யமாக விளங்கிய சட்டத்தரணியும் செனட்டருமான அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் புதல்வர். 1976ம் ஆண்டில் தமிழரசுக் கட்சி எம்.பிக்களுக்கு எதிரானட்ரயல் அற் பார் வழக்கில் ஆஜரான வழக்கறிஞர்களில் கனகஈஸ்வரனும் ஒருவர். வடமாகாண முதலமைச்சராக விருந்த சி.வி. விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் தேசியபட்டியல் எம்.பியாக அரசியலில் அறிமுகமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் பெயர்கள் வெவ்வேறு காரணங்களால் கட்சிக்குள் பேசப்பட்ட வேளையில் அவர்கள் பிரச்னைகளை தீர்ப்பதில் கனகஈஸ்வரன் பெரும் பங்காற்றியதாக அரசியல் விமர்சகர்களால் சுட்டிக் காட்டப் பட்டுவந்தது ஞாபகம் இருக்கிறது.

**அரசை உருவாக்கிய தங்கள் இலக்குகளை அடைய ஐந்து வருடங்கள் போதாது என்று கூறும் ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா, உதாரணத்துக்கு சிங்கப்பூரும் சீனாவும் இருபத்தைந்து வருடங்கள் வரை மாற்றங்களை நிறைவேற்ற எடுத்துக் கொண்டதாக தெரிவித்துள்ளார். இது இலங்கையில் ஒற்றையாட்சிதான் ஏற்படும் என்ற அச்சத்தை மேலும் வலுவாக்குகிறது.**

இக்குழுவில் இடம்பெற்றுள்ள மற்றைய சட்டத்தரணிகளும் சாதாரணமான வர்கள் அல்ல. அரசியலமைப்பு விவகார துறைசார் நிபுணர்களா கவும், சட்டக்கல்லூரி விரிவுரையாளர்களாகவும், பிரபல வழக்கறிஞர்க ளாகவும் பெயர் பெற்றவர்கள். எனவே இவர்கள் முன் னெடுத்திருக் கும் முயற்சி குறிப்பிடத்தக்களவில் எடுத்தகாரியத்தில் வெற்றியை பெற்றுக்கொடுக்குமென நம்பிக்கைகொள்ள இடமுண்டு.

தமிழ்த் தேசியஅரசியல் கட்சிகள் சார்பில் தமிழரசு, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பேரவை, ஜனநாயகதமிழ் தேசிய கூட்டணிஆகியவற்றின் சார்பில் ஒவ்வொருவரும்,கிழக்கு மாகாணத்திலிருந்து ஒருவருமாக அரசியல் கட்சிகள் சார்பில் இக்குழுவில் இடம்பெறுவர் என அறிவிக்கப்பட் டுள்ளது.

தமிழர் தேச அரசியலில் இரு துருவங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், எம்.ஏ.சுமந்திரனும் சட்டத்தரணிகளாக இருப்பதால் முறையே தமிழ்த் தேசிய பேரவை, தமிழரசுகட்சி ஆகியவை சார்பில் இக்குழுவில் இடம்பெறும் வாய்ப்பு உண்டு. கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெற இருப்பவர் தமிழரசு கட்சிக் காரராக இருப்பார் என்ற அறிவிப்பு சாணக்கியனை இக் குழுவுக்குள் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியாக இருக்கலாமென அனுமானிக்கப்படுகிறது.

புதிய அரசியலமைப்பினூடாக சகலராலும் ஏற்கப்படும் இனப்பிரச்சனைக்கான தீர்வுகாணப்படுமென்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாதொடர்ந்து கூறி வருகிறார். அண்மை யில் தம்மைச் சந்தித்த தமிழரசுக் கட்சிகுழுவின ரிடம் இதனையே ஜனா திபதி அநுரகுமர திஸ்ஸநாயக்கவும் தெரிவித்திருந்தார். இதன் அடிப்ப டையிலேயே தமிழ்ச் சட்டத்தரணிகள் தம்மை ஒரு பேரவை ஆக்கி தமிழ்த் தேசியகட்சிகளை இணைத்துக் கொண்டு புதிய அரசி யலமைப்புக்கு தமிழர் தரப் பிலான பொது ஆவணத்தை வடிவமைக்க முன்வந்துள்ளனர் என்று கருதப்படுகிறது.

2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அணிகளை ஒன்றாக இணைப்பதென்பது அசாத்தியமானதாகக் காணப்பட்டுவருகிறது. பலதடவைகள் பலர் இது தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் வேதாளத்தின் கதையாகப் போயிற்று. கதிரை ஆசை, பதவிமோகம்,தேர்தல் வெற்றிபோன்ற சுயகாரணிகள் இதற்குத் தடையாக இருந்துவந்துள்ளன. எனினும், இப்போது இம்முயற்சியைமேற் கொண்டிருப்பவர்கள் அக்கறையுள்ளசட்டத்தரணிகளாககாணப்படுவதால் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை குலையாது இவர்கள் செயற்படும் சாத்தியம் பெருமளவில் காணப்படுகிறது.

பிரச்சனைக்குரியவர்களான தமிழ்த் தேசியகட்சிகளை இணைக்கும் முதற்கட்டம் வெற்றிபெற்றுள்ளது. அனைத்துக் கட்சிகளுமே சமஷ்டியை ஏற்றுக் கொள்பவையாக தம்மை அடையாளம் காட்டியுள்ளன. எனினும், ஏக்கராஜ்ய இடையிடையே வந்து தலையைத் தூக்கி பிளவை ஏற்படுத்துகிறது. எதுவானாலும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை ஒருகோட்டில் இவர்கள் அனைவரையும் இணைக்ககூடிய வல்லமைகொண்டவர்கள் எனதமிழ் மக்கள் மத்தியில் அபிப்பிராயம் உள்ளது.

மறுபுறத்தில், ஜே.வி.பி.யும் அதன் இன்னொருவடிவமான தேசியமக்கள் சக்தியும் இனப்பிரச்சனை தீர்வுவிடயத்திலும், புதிய அரசமைப்பு உருவாக்கத்திலும் எவ்வளவு தூரத்துக்கு அக்கறை உள்ளன என்ற கேள்வி உள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாகும் வரைமாகாண சபை முறைமை இருக்குமென ரில்வின் சில்வா சிலவாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தார். ஆனால் மாகாணசபைக்கு தேர்தல் நடைபெறுமென்று அவர் கூறவில்லை. அவர் கூறும் மாகாண சபை முறைமை என்பது தற்போதுள்ள ஆளுனர்கள் நிர்வாகத்தை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. சிலமாகாண ஆளுனர்கள் அரசியல்வாதிகள் போலவும், அமைச்சர்கள் போலவும் கருத்துரைத்து வருகின்றனர். தங்களை நியமித்த அரச நிர்வாகத்தின் பேச்சாளர்கள் போலவும் காணப்படுகின்றனர். இதனைத்தான் ரில்வின் சில்வாகு றிப்பிட்டார் அல்லது விரும்புகிறார் என்றுசொல்லமுடிகிறது.

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சேகுவேரா புரட்சி என்று ஜே.வி.பி.யினர் மேற்கொண்ட நடவடிக்கையின் நினைவு தினம் கடந்த ஐந்தாம் திகதி ஏப்ரல் வீரர் தின நினைவேந்தல் என வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டது. இதில் உரையாற்றிய ரில்வின் சில்வா என்ன சொன்னார் என்பதை சற்று நோக்கவேண்டும். அது இவ்வாறுஅமைந்திருந்தது:

'நாட்டை ஒரே நாளில் அபிவிருத்தி செய்யமுடியாது. சமுதாயத்தை மாற்றவும் முடியாது. இன்றைய அரசை உருவாக்கிய இலக்குகளை அடையும்வரை அதனைப் பாதுகாக்கவேண்டியது அவசியம். 76 ஆண்டுகளாக நிலவிவரும் பழைய அமைப்பை மாற்றுவது எளிதான காரியம் அல்ல. சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகள் தங்களது மாற்றங்களை நிறைவேற்ற பத்து முதல் இருபத்தைந்து ஆண்டுகளை எடுத்துக் கொண்டன. முழு சமுதாயத்தையும் மாற்ற எமக்கும் பல ஆண்டுகள் தேவைப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தப் பணிகளை முடிக்க முடியாது. எனவே நாம் இன்றைய அரசை உருவாக்கிய இலக்குகளை அடையும்வரை அதனைப் பாதுகாக்க வேண்டும்" என்பதே ரில்வின் சில்வாவின் உரையின் முக்கியவரிகள்.

இன்றைய ஆட்சியில் பேச்சும் போக்கும் செயலும் ஒருகட்சிஆட்சியை நோக்கியே செல்வதாக ஓர் அச்சம் பரவலாகக் காணப்படுகிறது. தமிழர் தரப்பிலும் இந்தச் சந்தேகம் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. தேசியமக்கள் சக்தி அரசின் பின்னணியில் இயங்கும் ஜே.வி.பி. இவ்விடயத்தில் எந்த நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை ரில்வின் சில்வாவின் உரைகள் ஒளிவுமறைவின்றி தெரியத்தருகிறது.

இதன் அர்த்தம் என்ன என்பதை அலசி ஆராய வேண்டியதில்லை. தமிழர் பிரச்சனை தீர்வு விடயத்தை முன்னெடுக்க உருவாகியிருக்கும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை இதனை கவனத்தில் கொண்டிருப்பார்கள் என நம்புவோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத் தமிழர் அரசியல் என்பது தோல்விக்கான காத்திருத்தலா?



-யதீந்திரா

கடந்த வாரம் எழுதிய கட்டுரை தொடர்பில் சில எதிர்வினைகளை பார்க்க முடிந்தது. ஈழத் தமிழர் அரசியல்ரீதியில் ஒரு படித்த சமூகமா என்று கேட்டவுடன், சிலரால் அதனை பொறுத்துக்கொள்ள முடியவில்லை போலும். சிலர் முகநூல்களில் உணர்சிவசப்பட்டிருந்தனர். ஒரு சிலர் இவ்வாறு எதிர்வினையாற்றிருக்கின்றனர். அதாவது, சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை நாடாளுமன்ற பெரும்பான்மையின் ஊடாக மட்டும்தான், அடையலாம் என்பது தவறானது அனைத்துலக நடுவர் மன்றம் என்பதைப் பற்றித் தெரியுமா என்று ஒருவர் கேட்டிருந்தார். பெரும்பான்மையின மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் சமூகத்தின் இணக்கப்பாடு இன்றி, அனைத்துலக வழிமுறையின் ஊடாக சமஸ்டித் தீர்வை அடையலாம் என்பதுதான் சிலருடைய வாதமாக இருக்கின்றது. முதலில் அனைத்து உலகம் என்று ஒன்று இருக்கின்றதா என்னும் கேள்விக்கே உலகில் பதிலில்லை. இதே போன்று இன்னும் சிலரோ, வேறுவிதமாக ஆவேசப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. குறிப்பிடத்தக்க பொருத்தமான பங்களிப்புக்கள் இல்லாமல் பிறரின் பணியை விமர்சிக்கும் அணுகுமுறை எந்த விதத்திலும் போராட்டத்தை வலுப்படுத்தாது, மற்றவர்களின் செயல்திறனை கேள்விக்குள்ளாக்கும் முன், தங்களுடைய செயற்பாடுகள் என்ன, அவை எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பதை வெளிப்படையாக விளக்குவது அவசியம் என்று அவர்களின் பாராயணம் நீண்டு செல்கின்றது.

சிந்தனைரீதியான தலைமைத்துவம் என்று ஒரு விடயமுண்டு. இதனைத்தான் இந்தக் கட்டுரையாளர் பிரதிநிதித்துவம் செய்கின்றார். சிந்தனைத் தலைவர்கள் என்னும் விடயம் அதிகம் ஆங்கிலச் சூழலில்தான் விவாதிக்கப்படுவதுண்டு. தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் இந்த விடயம் பெரிதாக நோக்கப்படுவதில்லை ஏனெனில், அரசியல் கட்சிகளில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள், தங்களை அரசியல் சிந்தனையாளர்கள் என்றே எண்ணிக்கொள்கின்றனர். இப்போது, புலம்பெயர் அமைப்புக்களைச் சேர்ந்த சிலரும் இதில் இணைந்துவிட்டனர். இந்தப் பின்னணியில்தான் இந்தக் கட்டுரையாளரை நோக்கி கற்கள் வீசப்படுகின்றன. மாற்றுக் கருத்துக்கள் இருக்க வேண்டியதும் அதன் அடிப்படையில் அரசியல் விவாதங்கள் இடம்பெற வேண்டியதும் அவசியம். அப்போதுதான் அரசியல் தொடர்பில் இளைய தலைமுறையினர் மத்தியில் உரையாடல்கள் அதிகரிக்கும். அவர்கள், சரி தவறுகளை முன்வைத்து தங்களுக்குள் விவாதிப்பர். அவ்வாறு இடம்பெற்றால்தான் அரசியலில் கற்பனை கடந்த மாற்றங்கள் ஏற்படும்.

எங்களைப் போன்றவர்களை நோக்கி, நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை முதலில் கூறிவிட்டு, மற்றவர்களை நோக்கி குற்றச்சாட்டுங்களை முன்வையுங்கள் என்று ஆவேசப்பட்டால், நாங்கள் என்ன செய்ய முடியும்? அரசியல் விடயங்களை ஆய்வுக் கண்ணோட்டத்தோடு நோக்குபவர்களால், ஆய்வுகளைத்தான் எங்களுடைய பதில்களாக முன்வைக்க முடியும். அரசியல் வெறும் கற்பனையுடன் புனர்ந்திருக்கும் சூழலில், அதன் மீது ஓங்கி அடிப்பதும், யதார்த்தம் என்ன என்பதை உணர்த்துவதும்தான் எங்களுடைய பணி. அதனைத்தான் செய்து கொண்டிருக்கின்றோம். எனவே கருத்துருவாக்கிகளை நோக்கி நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்க முற்படுவதே முதலில் ஒரு அறியாமை. அரசியல்கட்சிகளை நோக்கி அவ்வாறு கேட்கலாம் ஏனெனில் செயற்படுவதற்காகத்தான் மக்கள் அவர்களை தெரிவு செய்திருக்கின்றனர். அதிலும் குறிப்பாக புலம்பெயர் சூழலில் இருந்து இவ்வாறான கேள்விகளை முன்வைக்க முயற்சிக்கும் போது, கடந்த பதினாறு வருடகாலமாக எவ்வாறான ஆக்கபூர்வமான அரசியல் தலையீடுகள் புலம்பெயர் சூழலிலிருந்து, மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றின் விளைவுகள் என்ன என்னும் கேள்விகளுக்கு பதில் தேட வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. முதலில் புலம்பெயர் சூழலில் பல்வேறு பெயர்களுடன் இயங்கிவருவோர் தங்களுடைய செயற்பாடுகளை சுயவிமர்சனம் செய்ய முயற்சிக்க வேண்டும்.

> **இலங்கைத் தீவில் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாட்டை சட்ட ரீதியில் உறுதிப்படுத்த வேண்டும் என்றால், அது பெரும்பான்மையின் இணக்கப் பாட்டுடன் மட்டும்தான், மேற்கொள்ள முடியும். சிங்கள மக்களை முற்றிலும் தனிமைப் படுத்தி இலங்கைத் தீவில் ஒரு தீர்வை ஒரு போதுமே அடைய முடியாது. வேண்டுமானால், அவ்வாறான பகல் கனவுகளை காணலாம்.**

யுத்தத்திற்கு பின்னரான சூழலில் எவ்வாறான விடயங்கள் உரையாடப்பட்டன? அவற்றின் சாதகமான விளைவுகள் என்ன? பதில் எவரிடமாவது இருக்கின்றதா? ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடாக அழுத்தங்களை அதிகரிப்பதன் மூலம், இலங்கை அரசாங்கங்களை இறங்கிவரச் செய்யும் முயற்சிகளுக்கு என்ன நடந்தது? தோல்வி. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்வதன் ஊடாக நீதியை நிலைநாட்டும் முயற்சிக்கு என்ன நடந்தது? தோல்வி. கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில், அங்குள்ள அரசியல் உயரடுக்கினரை கையாளுவதன் ஊடாக, இலங்கையின் மீது சர்வதேச நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என்னும் வாதங்களுக்கு என்ன நடந்தது? தோல்வி. இவை அனைத்திலும் ஏன் தோல்வி ஏற்பட்டது? இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்? பதிலைத் தேடும் துணிவு இல்லை ஆனால் மீண்டும் தோல்வி அடைவதற்கான ஆசை மட்டும் குறையவில்லை. இப்போது மீண்டும், சர்வதேச நடுவர் மன்றம் என்னும் ஒரு புதிய கதை. யார் அந்த சர்வதேசம்? இலங்கை அரசாங்கத்தின் இணக்கம் இன்றி எவ்வாறு, இலங்கைக்குள் சமஸ்டியை ஏற்படுத்துவது? அதற்கான உதாரணங்கள் இருக்கின்றனவா? ஒரு நாட்டை உடைப்பது புரட்சியின் மூலம் சாத்தியப்படலாம் ஆனால் ஒரு நாட்டுக்குள் தீர்வு என்றால் அதற்கு அந்த நாட்டுக்குள் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். பலாத்காரத்தால் சமஸ்டியை ஏற்படுத்த முடியாது. இந்தச் சிறிய உண்மையை புரிந்து கொள்வதற்கு ஏன் இந்தளவு சிரமம்? இவ்வாறான அரசியல் கதைகளை கூறுவோர் தொடர்பில் உண்மையில் கோபப்படத்தான் வேண்டும் ஆனால் அதற்கு பதிலாக பரிதாபமே ஏற்படுகின்றது. எனெனில் இவர்கள் தாங்கள் முட்டாள்களாக இருப்பதால் அல்லது தாங்கள் வெகுசன விரோதிகளாக இருப்பதால் மற்றவர்களும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இவர்கள் மீது எவ்வாறு கோபப்பட முடியும்!

இந்த இடத்திலும் ஒரு மேற்குலக ராஜதந்திரி குறிப்பிட்ட விடயம்தான் நினைவுக்கு வருகின்றது. இது சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இன்று ஒப்பீட்டடிப்படையில் கனடாவில்தான் அதிகமான புலம்பெயர் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அண்ணளவாக மூன்று லட்சத்திற்கும் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. ஒரு தமிழர் அமைச்சராகவும் இருக்கின்றார். இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் பலர் அரசியலில் இருக்கின்றனர். இந்த அடிப்படையில் புலம்பெயர் தமிழ் செயற்பாடுகள் தொடர்பில் உங்களுடைய அபிப்பிராயம் என்ன என்று நான் கேட்டபோது, அவர் நேரடியாக பதிலளிக்கவில்லை. எனக்கு ஒரு அண்ணன் இருக்கின்றார். அவர் தொழில்ரீதியில் ஒரு உயர் பதவியில் இருக்கின்றார். அவர் மிகவும் ஆடம்பரமான இல்லத்தில் வாழ்கின்றார். நாங்கள் ஒய்வு நேரங்களில் சந்தித்துக் கொள்வோம். அப்படியான சந்தர்பங்களில், அவர் ஒரு மதுக் குவளையுடன், கம்யூனிசம் பற்றிப் பேசுவார். மார்க்ஸ், லெனின் பற்றி பேசுவதில் மகிழ்ச்சியடைவார். இதனைக் கூறிவிட்டு என்னை நோக்கினார். முதலில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை பின்னர்தான் விளங்கியது, இப்படித்தான் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு, இலங்கையின் அரசியல் பற்றி பேசுபவர்களுடைய நிலைமையை, புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அவருடைய பதில். கண்ணதாசனின் ஒரு பாடல் வரியுண்டு, இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சவுக்கியமே - அப்படித்தான் வசதியான இடங்களில் இருந்து கொண்டு, அடுத்தவருக்கு அறிவுரைகள் கூறுவது மிகவும் இலகுவானதுதான்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கு முரண்பாடுண்டு? எவருக்குமில்லை. அந்த அடிப்படையில்தானே, அனைத்து அரசியல் கட்சிகளும், ஆயுத இயக்கங்களும் செயற்பட்டிருந்தன. அதற்காகத்தானே எத்தனையோ தியாகங்கள் புரியப்பட்டன. பலர் தங்களின் உயிர்களையும் தியாகம் செய்திருந்தனர். ஆனால் அரசியல்ரீதியில் எதனையும் அடைய முடியவில்லை என்பதுதானே நமது பிரச்சினை. அனைத்து நகர்வுகளும் தோல்வியில்தானே முடிவுற்றிருக்கின்றது. இந்த நிலையில்தான் அரசியலை கடந்த கால அனுபவங்களிலிருந்து புரிந்து கொண்டு, அதற்கேற்ப செயற்பட வேண்டியது கட்டாயமாகின்றது. நமது கடந்த காலம் என்ன சொல்கின்றது? ஒரு சமூகம் எத்தகைய தியாகங்களை புரிகின்றது, அர்ப்பணிப்புடன் இருக்கின்றது, கொள்கையில் உறுதியாக இருக்கின்றது என்பதெல்லாம் அதன் வெற்றியை தீர்மானித்து விடுவதில்லை. இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் எழுச்சியும், அதன் வீழ்சியுமே மிகச் சிறந்த உதாரணமாகும். தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் வெற்றியை தந்துவிடும் என்றால் விடுதலைப் புலிகள் வெற்றிபெற்றிருக்க வேண்டுமல்லவா! எனவே இங்கு விடயம் வேறு.

குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையை புரிந்து கொண்டு, அதற்கேற்ப தூர நோக்கோடு செயற்படுவதன் மூலம் மட்டும்தான் வெற்றியை பெற முடியும். வரலாற்றில் வெற்றிபெற்றவர்கள் என்னும் பட்டியலில் இருக்கும் அரசியல் இயக்கங்கள் அனைத்தும் அப்படித்தான் வெற்றிபெற்றிருக்கின்றன. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் கணிசமான அரசியல் அதிகாரங்களை பெற்றிருக்க முடியும் என்றால், அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலத்தில்தான் அடைந்திருக்க முடியும். ஒஸ்லோ பேச்சுவார்த்தையை ஒரு சமஸ்டிக்கான பொறியாக மாற்றியிருந்தால், அது சாத்தியப்பட்டிருக்கும். அரசியல் என்பது அடிப்படையில் ஒரு தரப்பு அதன் பலம் கொண்டு மற்றவர்களுடன் பேரம் பேசுவதுதான். பேரம் பேசுவதற்கான பலம் இல்லாத போது எதிர்பார்ப்புக்கள் என்பது வெறும் கோசங்கள் மட்டுமே! இப்போது நம்மிடமுள்ள சமஸ்டிக் கோசம் போன்று.

இலங்கைத் தீவில் சமஸ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாட்டை சட்டரீதியில் உறுதிப்படுத்த வேண்டும் என்றால், அது பெரும்பான்மையின் இணக்கப்பாட்டுடன் மட்டும்தான், மேற்கொள்ள முடியும். சிங்கள மக்களை முற்றிலும் தனிமைப்படுத்தி இலங்கைத் தீவில் ஒரு தீர்வை ஒரு போதுமே அடைய முடியாது. வேண்டுமானால், அவ்வாறான பகல் கனவுகளை காணலாம். அதுதான் இதுவரையான அரசியல் வரலாறு. தற்போதுள்ள மாகாண சபை முறைமையானது, இந்தியாவின் தலையீட்டினால் நிகழ்ந்தது என்றாலும் கூட, ஜே.ஆர் ஜெயவர்த்தன அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன்தான் அது நிகழ்ந்தது. அவ்வாறான இணக்கப்பாட்டை நோக்கி இறங்கி வரச் செய்வதற்குத்தான் தமிழ் இயக்கங்களுக்கு இந்தியா பயிற்சியளித்தது. தமிழ் இயக்கங்களுக்கான ஆயுதப் பயற்சி என்பது, அடிப்படையில் கொழும்பின் ஆட்சியாளரை இறங்கிவரச் செய்வதற்கான ஒரு அழுத்தமும், அதே வேளை, தமிழரின் பேசம் பேசும் பலத்தை அதிகரிப்பதற்கான ஒரு உக்தியும்தான். இந்தப் பின்புலத்தில்தான், அரசியலமைப்பில் 13வது திருத்தச்சட்டம் சட்டமாக்கப்பட்டது. அது சட்டமாக்கப்பட்டதால்தான் இப்போதும் எஞ்சியிருக்கின்றது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீளிரா:

# நிறையாத திரையரங்குகள்?



நிலாந்தன்

**எங்கட புத்தகங்கள், எங்கட பொடியள், எங்கட படங்கள், எங்கட கதை, எங்கட இயக்குனர், எங்கட. .எங்கட.. எங்கட..** இது அண்மை ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் மத்தியில் மேலெழும்பும் வார்த்தைகள்.

"எங்கட புத்தகங்கள்" என்ற அமைப்பு கந்தர் மடப் பகுதியில் இயங்குகிறது. இந்தியாவின் பிரமாண்டமான புத்தகச் சந்தையோடு ஒப்பிடுகையில் எங்கட புத்தகச் சந்தை மிகச் சிறியது. அந்த பெரிய சந்தைக்குள் தங்களுடைய தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டு வணிகரீதியாகவும் வெற்றிபெறவேண்டும் என்று விரும்புகிறவர்கள் எங்கட புத்தகங்களை, எங்கட வெளியீடுகளைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று சிந்திக்கிறார்கள். எனினும் எங்கட புத்தகங்களால் எங்களுக்குக் கிடைக்கும் லாபம் ஒப்பீட்டுளவில் குறைவு. எங்கட எழுத்தாளர்கள் எங்கட புத்தகங்களை எங்கட சந்தையில் விற்று வாழ்க்கையை நடத்தமுடியுமா?

ஆனால் தமிழகப் பெரும் சந்தையில் தமது புத்தகங்களைத் திட்டமிட்டு வெளியிடுகின்ற அதாவது புத்தகத் திருவிழாக்களை நோக்கி புத்தகங்களை வெளியிடுகின்ற எங்கள் எழுத்தாளர்கள் சிலர் சந்தை நிலவரங்களைக் கணித்து புத்தகம் எழுதி ஓரளவுக்குச் சம்பாதிக்கிறார்கள்.

அதே சமயம் எங்கட பொடியள் என்று இப்பொழுது அழைக்கப்படுகின்ற தமிழ்ராப் குழுவினர் ஐரோப்பாவில் எங்கட புலம்பெயர்ந்த சனத்தால் கொண்டாடப்படுகிறார்கள். தாராளமாக உழைக்கிறார்கள். புலம்பெயர் சமூகம் எங்கட பொடியளின் பாடல்களைக் கேட்க தாகத்தோடு திரள்கிறது. எங்கட பொடியளும் இவ்வளவு பவுன்ஸ் வையுங்கள் என்று டிமாண்ட் பண்ணி உழைக்கிறார்கள்.


ஆனால் எங்கட திரைப்படங்கள் அப்படி உழைக்கின்றனவா? எங்கட திரைப்படங்கள் தாயகத்தில் இப்பொழுதும் சிறிய சந்தையை நோக்கித்தான் வருகின்றன. சிறியதொகைப் பார்வையாளர்கள் சிறுதொகை லாபம் அல்லது முதலுக்கே நட்டம்?

இவ்வாறு எங்கட எங்கட என்று அழைக்கப்படுகின்ற ஒருகாலச் சூழலில் **"நீளிரா"** என்ற படம் வெளிவந்திருக்கிறது. அது முழுக்க முழுக்க எங்கட படம் அல்ல. அதுஒரு கூட்டுத் தயாரிப்பு. ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்பு. அங்கே எங்கட கதை இருக்கிறது. எங்கட இயக்குனர், எங்கட கலைஞர்கள் சிலர். ஆனாலது முழுமையாக எங்கட சினிமா அல்ல. அது ஒரு கூட்டுத் தயாரிப்பு. ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்பு.

இதற்குமுன் ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்புகளாக வெளிவந்த பலபடங்கள் ஒப்பீட்டு ரீதியாக உழைத்திருக்கின்றன. ஆனால் துயரம் என்னவென்றால், எங்கட போராட்டத்தை, எங்கட காயங்களை, கண்ணீரைப் படமாக்கிய நீளிராவை எங்கட சனங்கள் திரண்டுபோய்ப் பார்த்தார்களா?

நான் பார்க்கப் போனது படம் வெளியிடப்பட்ட இரண்டாம் நாள். திரையரங்கில் அரைவாசி கூடநிரம்பவில்லை. முதலாவது நாளும் அப்படித்தான். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல மட்டக்களப்பிலும் நிலைமை மோசம். வவுனியாவில் 70க்கும் குறையாத தொகை வந்திருந்தது. கொழும்பில் ஓரளவுக்குத் திருப்தியாக அரங்கு நிரம்பியதாகத் தெரிகிறது. அதே சமயம், புலம்பெயர்ந்த தமிழ் அரங்குகளிலும் மிகக்குறைந்த ஆட்களே வந்திருக்கிறார்கள். கனடாவில் முதலாவது காட்சியில் மொத்தம் 20 பேர் என்று நண்பர் சொன்னார்.

எங்கட பொடியளை காவிக் கொண்டு திரியும் புலம்பெயர்ந்த தமிழர்கள் எங்கட துயரங்களைக் காவிக் கொண்டுவரும் ஒரு படத்தை ஏன் கவனிக்கத் தவறுகிறார்கள்? ஆடவேண்டும், பாட வேண்டும், துள்ளவேண்டும், குதிக்க வேண்டும் சந்தோஷமாக இருக்க வேண் டும். ஆனால் நாங்கள் கடந்து வந்த வர லாற்றின் ஒரு பகுதியை வழமையான வணிக சினிமாவைப் போலன்றி சீரியஸான திரைமொழியில் முன்வைக்கும் ஒரு திரைப்படத்தை ஏன் எங்கட சனம் திரளாகப் போய்ப் பார்க்கவில்லை? தாய கத்திலும் தாயகத்துக்கு வெளியே தமிழர் கள் புலம்பெயர்ந்து வாழும் இடங்களி லும் அந்தப் படம் வணிக ரீதியாக தியேட்டர்களை நிரப்பியதா?




குறிப்பாக டொலர்களாக, பவுண்ஸ்களாக, யூரோக்களாக காசைக் கண்ணை மூடிக்கொண்டு அள்ளி வீசும் எங்கட புலம்பெயர்ந்த மக்கள், இப்பொழுது தமிழ் வணிக சினிமாவின் காசுகாய்க்கும் மரங்களாக மாறிவிட்டார்கள். தங்களுடைய ரத்தம் சிந்தும் இறந் தகாலத்தை முன்வைக்கும் ஒரு படத்தை, பெருமளவுக்கு வணிக சினிமாவுக்கு வெளியே வரும் ஒருபடத்தை, ஏன் அவர்கள் போற்றுகிறார்கள் இல்லை?

தமிழர்கள் ரூபாய்க ளோடு இருந்தாலும் டொலர்களோடு இருந்தாலும் தமிழ் கூறும் நல்லுலகில், ஜனரஞ்சகத்துக்கும் புத்திசாலித்தனத்துக் கும் இடையிலான இடைவெளி எப்பொ ழுதும் அதிகமாகத்தான் இருக்குமா?



அதனால் தான் ஈழச் சினிமா இப்பொழுதும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது என்று கார்த்திக் சுப்புராஜ் -அவர்தான் நீளிராவுக்கு முதலீடு செய்தவர் - கூற வேண்டி வந்ததா? அண்மையில் அவர் வெளியிட்ட ஒருகுறிப்பு பின்வருமாறு கூறுகிறது "ஞாயிற்றுக் கிழமை ஈஸ்டர் நாளில் மக்கள் ஆதரவால் எங்கள் படம் உயிர்த்தெழும் என்று உறுதியாக நம்பினோம். ஆனால் ஈழத் தமிழ்ச் சினிமாவுக் கான ஈஸ்டர் ஞாயிறு இன்னும் வரவில்லை. பலவருடங்களாகச் சிலுவையில் அறையப் பட்டிருக்கும் ஈழத் தமிழ்ச் சினிமாவை உயிர்த்தெழச் செய்ய உங்களால் மட்டும் முடியும். தயவுசெய்து எங்கள் திரைப்படத்தை திரையரங்குகளில் சென்றுபாருங்கள்.."

எங்கட காயங்களை, எங்கட கண்ணீரை, எங்கட கதையைக் கூறும் ஒருபடத்துக்கு ஒரு தமிழ்நாட்டுத் தயாரிப்பாளர் முதலிட்டிருக்கிறார். எங்கட, எங்கட என்றுவாய் ஓயாமல் உச்சரிக்கின்ற எங்கட சனம் அதைத் தேடித் தேடித் பார்கின்றதா?

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழக சினிமா பிரபல்யங்களுக்கும் பாடகர்களுக்கும் அரங்கமைத்துக் கொடுத்து காசை அள்ளிக் கொட்டும் எங்கட புலம் பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் கதையைப் பேசும் ஒரு திரைப்படத்துக்கு ஏன் அதிகமாக வரவில்லை ?

படத்தைச் சந்தைப்படுத்தும் பொறுப்பு ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருப்பதனால் அந்த நிறுவனம் தான் அதைப் பார்த்துக் கொள்ளும் என்று சோமிதரன் எனக்குச் சொன்னார். அந்த நிறுவனம் தமிழ் பகுதிகளில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய விளம்பரத்தைச் செய்ததாகத் தெரியவில்லை. உள்ளூர் ஊடகங்களில் அதற்குரிய விளம்பரத்தை அதிகமாகக் காணமுடியவில்லை. உள்ளூர் மதில்களில் குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியும் பலாலி வீதியும் வெட்டும் நாற்சந்தியில் முன்னிலை சோசியலிச கட்சியின் அமெரிக்காவுக்கு எதிரான பெரிய சுவரொட்டி காணப்படுகிறது. நீளிராவை காணவில்லை.

விளம்பரம் போதாது. ஆனால் சமூக வலைத்தளச் சூழலில் நீளிராஅதிகம் விவாதிக்கப்படுகிறது. போற்றப்படுகிறது. கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் சினிமாப் பிரபலங்கள் பலர் அதைக் கொண்டாடி மகிழ்கிறார்கள். இதில் ஒரு கூட்டுணர்வு, சகோதரத்துவம் வெளிப்படுகிறது."டூரிஸ்ட் பமிலி" படத்தில் வெளிப்பட்டதுபோல. ஆனால் துயரம் என்னவென்றால், சமூகவலைத்தளச் சூழலும் தமிழ்ப் பௌதிகச் சூழலும் ஒன்றுஅல்ல.


தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படுவதுபோல, சமூகவலைத்தளச் சூழலும் பௌதீக நிஜச் சூழலும் வேறுவேறு என்பதைத்தான் தாயகத்தில், திரையிடப்பட்ட பெரும்பாலான திரையரங்குகளில் மிச்சமிருந்தவெறும் கதிரைகள் உணர்த்துகின்றனவா?

நிதிரீதியாக அந்தத் தயாரிப்பாளர் தோல்வியடைந்தால் தமிழக முதலீட்டாளர்கள் இதுபோன்ற படங்களில் கைவைக்க யோசிப்பார்கள். நிதிப் பலம் மிக்க புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் எங்கே காசைக் கொட்டுவது என்று தெரியாமல் சில சமயங்களில் காசை வீண் விரையம் செய்கிறது. அல்லது முழுக்க முழுக்க வணிகத் திரைமுதலீடுகளில் தமது காசை முதலீடு செய்கிறது. கோடம்பாக்கத்தில் அவ்வாறு வெற்றிபெற்ற புலம் பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் உண்டு. ஆனால் அவர்களில் எத்தனை பேர் இதுபோன்ற எங்கட படங்களில்,எங்களோட கதைகளில் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறார்கள்?

ஒருபுறம் இதுவரைசொல்லப்படாத போர்க் கதைகள். இன்னொரு புறம் நிதிப் பலம் மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம். இரண்டுக்குமிடையே எங்கட கதைக்கு ரிஸ்க் எடுத்துமுதலீடுசெய்யத் தயாராக இருக்கும் தமிழகத் தயாரிப்பாளர்கள். அரசு இல்லாத ஈழத் தமிழர்கள் இந்த வளங்களை ஒருங்கிணைக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். இந்த வளங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைக்கும் போதே கார்த்திக் சுப்புராஜ் கூறியதுபோல ஈழச் சினிமாவுக்கான உயிர்த்தஞாயிறு உதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிவப்புத் தோழர்களின் சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டதா?



- கந்தையா அருந்தவபாலன்

கடந்தகால அரசாங்கங்களின் தொடர்ச்சியான தவறுகளே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தது. குறிப்பாக முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் அதிகாரமுறைகேடுகளும் அதனால் உருவான பொருளாதார நெருக்கடிகளுமே தற்போதைய அரசாங்கத்துக்கு என்றுமில்லாதவாறான மக்கள் ஆதரவை அள்ளிக்கொடுத்தது. வளமான நாடு அழகான வாழ்க்கை என்று இவர்கள் கூறிய மாற்றமொன்றுக்காகவே மக்கள் வாக்களித்தார்கள். மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்பட்டு வருகிறதா? மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றுகிறதா? குறிப்பாக இவர்களால் பெரிதும் விமர்சிக்கப்பட்டவையும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு காரணமாயுமிருந்த முன்னைய ஆட்சியாளர்கள் செய்த முறைகேடுகள் இவர்களின் ஆட்சியில் இடம்பெறவில்லையா? அல்லது இவர்களும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளாக தமது சிவப்பு வண்ணத்தை வெளிறச் செய்கிறார்களா?

**பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா?**

இவர்களின் ஆட்சிக்காலத்தில் பொருளாதாரச் சுட்டிகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பதிவு செய்துள்ளன. உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரத்தில் சுற்றுலா, புலம்பெயர் தொழிலாளர்களின் பணவனுப்புதல்கள் போன்றனவற்றின் வளர்ச்சி, வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு,கடன் மீளளிப்பு போன்றவற்றில் முன்னேற்றம் என்பன குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும். ஆனால் இம்மாற்றங்களுக்கு முழுமையான சொந்தக்காரர் இந்த அரசாங்கத்தினர் அல்லர். இம்மாற்றங்களுக்கான பெருமளவு உரித்து ரணிலையே சேரும். கொரோனா மற்றும் அரசியல் குழப்பங்களால் கையறு நிலைக்குத் தாழ்ந்த பொருளாதாரத்தை மேலெழுவதற்கான அடித்தளத்தை ரணிலே உருவாக்கினார். குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடு,வெளிநாட்டுக்கடன் தொடர்பான தீர்மானங்கள், அரச நிறுவனங்களின் சீரமைப்பு போன்றவற்றை ரணில் மேற்கொண்டதனால் 2022 இன் இறுதியிலிருந்தே பொருளாதாரம் மேல்நோக்கி அசையத் தொடங்கியது. அதன் பயனை இப்போது இந்த அரசாங்கம் அனுபவிக்கிறது என்பதுதான் உண்மை. அனுர மட்டுமன்றி ரணிலோ அன்றி வேறு நபரோ ஆட்சியிலிருந்தாலும் இந்தப் பொருளாதாரப் பெறுபேறுகள் கிடைத்திருக்கும்.

தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியினர் கூறியது போன்று, சர்வதேச நாணய நிதியத்தை வெளியேற்றுதல், தனியார்மயமாக்கலை நிறுத்துதல், எரிபொருள் விலைகளை மூன்றிலொன்றாகக் குறைத்தல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், வறுமையை அகற்றுதல், ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியை உயர்த்துதல் எதுவுமே நடக்கவில்லை. இவர்களால் வெளியேற்றுவோம் என்ற சர்வதேச நாணய நிதியம்தான் இவர்களின் ஆட்சியைப் பாதுகாத்துவருகிறது. தனியார் மயமாக்கல் தொடர்கிறது. இவர்களால் சம்பள உயர்ச்சி வழங்கப்பட்டாலும் அது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். இதேபோன்றதொரு சம்பள உயர்ச்சி 2015 இலும் அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய அரசாங்கம் முன்னெப்போதும் இல்லாதவாறு தனிநபர் வருமான வரிகள் உட்பட பல வரிகளை உயர்த்தியுள்ளது. முன்னைய ஆட்சிக்காலத்தில் அரச ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புகள் நியாயமானவை. ஆனால் இப்போது அவை அநியாயமானவை.

> **தொடக்கத்தில் எந்தவித ஊழலும் நடக்கவில்லை என்றார்கள். பின்னர் தரங்குறைந்த நிலக்கரியால் மின்னுற்பத்திக்கோ பொறிகளுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்றார்கள். ஆனால் இப்போது பாராளுமன்றில் ஜனாதிபதியே அதனையேற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்குதள் ளப்பட்டுள்ளார்.**

அரசாங்கத்தின் பொதுச்செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் அது இவ்வரசாங்கத்தின் கொள்கையா அல்லது பொருளாதார நிலைமையின் நிர்ப்பந்தமா என்பதை எதிர்காலமே தீர்மானிக்கும். ஏனெனில் ஆட்சியாளர்கள் தம்மை எளிமையானவர்களாக வெளியில் காட்டிக்கொள்வது போல இயல்பாகவில்லை. அனுர பதவியேற்றவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்த சில வாகனங்கள் ஏலம் விடப்பட்டு தான் முன்னையவர்களை விட வேறானவர் என விளம்பரப்படுத்திக்கொண்டார். எனினும் ஜனாதிபதி அலுவலகத்தில் மட்டும் 633 வாகனங்கள் இன்றும் உள்ளன. அவற்றுள் பல மிக ஆடம்பரமானவை என்பதுடன் புதியவையும்கூட. இதேபோலவே அரசாங்க விழாக்களின் அளவு, ஏற்பாடுகள், அவற்றுக்கான செலவுகளிலும் கூட பெருமளவு குறைவு ஏற்படவில்லை. இவ்விழாக்களுக்கு அரசுச் செலவில் மக்களை ஏற்றியிறக்குவதில் எந்த மாற்றமும் இல்லை. இதற்கு நல்ல உதாரணம் இவ்வாண்டுத் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச விழாவொன்றுக்கான செலவு வகைகள் பற்றிய அறிக்கை.

நாட்டில் எரியும் பிரச்சினையாக இருந்துவரும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டனவா என்றால் அதுவும் இல்லை. மாகாண சபைகளுக்கான தேர்தல் இல்லை. அரசியலமைப்பு மாற்றத்துக்கான எந்த முயற்சிகளும் இல்லை. இனப்படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகளுக்குத் நீதியில்லை. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களுக்கு முன்னரைப்போலவே முட்டுக்கட்டை. பயங்கரவாதச் சட்டம் மாறவில்லை. அவசரகாலச் சட்டமும் இணைந்து கொண்டுவிட்டது. முன்னைய ஆட்சியாளரைப்போலவே ஒருபுறத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட சில சிறிய காணிகளை விடுவிப்பதாகப் பெரியளவு விளம்பரம் செய்துகொண்டு மறுபுறத்தில் காணிகளைக் கையகப்படுத்தும் முயற்சிகள் தொடர்கிறது. மகாவலித் திட்டம் என்ற பெயரில் மகாவலி பாயாத இடங்களில் சிங்களக் குடியேற்றத்திட்டங்கள் தொடர்கின்றன. தொல்பொருள் பாதுகாப்பு, வனவளப் பாதுகாப்பு என்ற பெயரில் காணி மற்றும் இந்து வழிபாட்டிடங்கள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படுகின்றன. தேசிய இனப்பிரச்சினை வெறும் அபிவிருத்தி சார்ந்த பிரச்சினை என்ற முன்னைய ஆட்சியாளரின் அணுகுமுறையை இவர்களும் கையிலெடுத்துள்ளனர். அவ்வாறாயின் மாற்றத்தை எதிர்பார்த்து என்றுமில்லாதவாறு சிங்களக் கட்சியொன்றுக்கு வாக்குகளை அள்ளிக்கொடுத்த தமிழ்மக்களுக்கு அனுர அரசு கொடுத்த மாற்றங்கள் எவை?

கடந்தகால ஆட்சியாளர்களைவிட தாங்கள் எந்தவகையிலும் மாறுபட்டவர்கள் அல்லர் என்பதை தற்போது ஊழல்முறைகேடுகளைச் செய்வதிலும், செய்தவர்களைப் பாதுகாப்பதிலும் இவர்கள் காண்பிக்கத் தொடங்கிவிட்டனர். ஒருபுறத்தில் முன்னைய ஊழல் வாதிகளின் கைது நாடகம். மறுபுறத்தில் ஊழல் அமைச்சர்களை பாதுகாக்கும் கைங்கரியம். முதற்கோணல் முற்றும் கோணல் என்றவகையில் சபாநாயகரின் தில்லுமுல்லில் தொடங்கி, கொள்கலன்களின் முறையற்ற விடுவிப்பு, வசந்த சமரசிங்க, லால்காந்த போன்றோரின் முறையற்ற சொத்துச் சேகரிப்புகளைத் தொடர்ந்து தற்போது நிலக்கரி ஊழலில் வந்து நிற்பதாகக் கூறப்படுகிது. இது முற்றுப்புள்ளியன்று, வெறும் கமா மட்டுமே. ஏனெனில் ஊழல் செய்தவர்கள் இந்த அரசாங்கத்திலும் பாதுகாக்கப்படுகிறார்கள். நிலக்கரிக் கொள்வனவில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளை தேசிய கணக்காய்வாளர் அறிக்கை அம்பலப்படுத்தி நிற்கிறது. அது சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதியின் விமர்சனத்துக்கும் உள்ளாகியுள்ளது.

தொடக்கத்தில் அவ்வாறு எந்தவித ஊழலும் நடக்கவில்லை என்றார்கள். பின்னர் தரங்குறைந்த நிலக்கரியால் மின்னுற்பத்திக்கோ பொறிகளுக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை என்றார்கள். ஆனால் இப்போது பாராளுமன்றில் ஜனாதிபதியே அதனையேற்றுக் கொள்ளவேண்டிய நிலைக்குதள்ளப்பட்டுள்ளார். ஆனால் ஏற்படும் நட்டங்களை வேறுகாரணங்களால் மறைப்பதற்கு முயற்சிப்பு. அந்த இழப்புகளில் ஒரு பகுதியை மக்களிடமிருந்து கட்டணமாகவும் இன்னொரு பகுதியை அரசாங்கமும் பொறுப்பேற்கும் என ஜனாதிபதி முன்மொழிகிறார். அரசாங்கப்பணம் என்பது அனுரவின் பணமோ அன்றி தேசிய மக்கள் சக்தியின் பணமோ கிடையாது. அதுவும் மக்கள் பணந்தானே! மக்களை ஏமாற்றும் தோழர்களின் வாய்வல்லமை இதிலும் தெரிகிறது. எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி ஏலவே ஊழல் செய்த ஒருவர். அவரை அமைச்சராக நியமித்தது மட்டுமல்ல, பதவியில் தொடர அனுமதித்ததுடன் இறுதியாக தமது பாராளுமன்றப் பலத்தின் மூலம் அந்த ஊழல்வாதி தமக்கு நம்பிக்கையானவர் என உறுதிப்படுத்தியும் விட்டனர். அவ்வாறாயின் முன்னைய ஆட்சியாளரால் இதேபோன்று பாராளுமன்றத்தால் காப்பாற்றப்பட்ட சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கும் இந்த குமார ஜெயக்கொடிக்கும் என்ன வேறுபாடு. முன்னைய மகிந்த, ரணிலைவிட அனுர எவ்வகையில் வேறுபட்டவர்?

தோழர்களின் சிவப்புச் சாயம் மெல்ல மெல்ல வெளுப்பதன் மூலம் போராடும் தேசம் புதிய எஜமானர்களை உருவாக்கும் என்ற கூற்று இங்கு படிப்படியாக உறுதியாகி வருகிறது. மாற்றத்துக்காக வாக்களித்தவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படத்தொடங்கிவிட்டது என்பதுதான் கசப்பான உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அமெரிக்க அதிகாரத்தின் எல்லைகளை ஈரானில் எதிர்கொள்ளும் ட்ரம்ப்

ஸ்டான்லி ஜோனி

"நிபந்தனையற்ற சரணடைதலைத் தவிர ஈரானுடன் வேறு எந்த ஒப்பந்தமும் கிடையாது!" என்று போர் தொடங்கிய ஏழாம் நாளான மார்ச் 6 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறினார். ஆனால் போரின் 40 வது நாளான ஏப்ரல் 8 ஆம் திகதி ஈரான் தனது நிபந்தனைகளை ஏற்காவிட்டால் அதன் நாகரிகத்தையே அழித்து விடுவேன் என்று மிரட்டிய சில மணி நேரங்களிலேயே, இரண்டு வார கால போர்நிறுத்தத்தை ட்ரம்ப் அறிவித்தார்.

மேலும், ஈரான் முன்வைத்த யோசனைகளை எதிர்கால பேச்சுக்களுக்கான "செயல்படுத்தக்கூடிய அடிப்படை" யாகக் கருதவும் ட்ரம்ப் ஒப்புக் கொண்டார். இந்த போர்நிறுத்தத்தை மதிப்பதாகவும் ஈரானியப் படைகளின் ஒருங்கிணைப்புடன் ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு "பாதுகாப்பான பாதையை" உறுதி செய்வதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இந்த போர்நிறுத்தம் நீடிக்குமா அல்லது இது ஒரு நிரந்தர அமைதி ஒப்பந்தத்திற்கு இட்டுச் செல்லுமா என்று முடிவு செய்ய இது ஆரம்ப கட்டமாக இருந்தாலும், ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது - ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலியப் போர் அதன் அறிவிக்கப்பட்ட நோக்கங்களை அடையத் தவறியது மட்டுமல்லாமல், மேற்கு ஆசியாவில் ஈரானின் நிலையை ஒரு முக்கிய பிராந்திய சக்தியாக மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

பெப்ரவரி 28 ஆம் திகதி போரைத் தொடங்கியபோது, ட்ரம்ப் ஐந்து முக்கிய நோக்கங்களை முன்வைத்தார்

1) ஈரானின் ஏவுகணைத் தொழில்நுட்பத்தை- "தரைமட்டமாக்குவது".

2) ஈரானிய கடற்படையை "அழிப்பது".

3) ஈரானின் "ஆதரவுப் படைகள்" (proxies) இனிமேல் மேற்காசியப் பிராந்தியத்தை நிலை குலையச் செய்யாமல் இருப்பதை உறுதி செய்வது.

4) ஈரான் அணு ஆயுதத்தைப் பெறுவதை எப்போதும் தடுப்பது.

5) ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவது.

ஆனால், இவற்றில் ஒன்றுகூட நிறைவேறவில்லை.

நாற்பது நாட்களுக்குப் பிறகு, ட்ரம்பின் மிகப்பெரிய கோரிக்கை அவரது ஆரம்ப நோக்கங்களில் இல்லாத ஒன்றாக இருந்தது - அதாவது "ஹோர்முஸ் நீரிணைய மீண்டும் திறப்பது".

40 நாட்களில் ஈரான் கடுமையாகத் தாக்கப்பட்டது. அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமேனி, பாதுகாப்புச் சபை தலைவர் அலி ஷாம்கானி மற்றும் பாதுகாப்புச்சபை தலைவர் அலி லாரிஜானி உள்ளிட்ட பல முக்கிய தலைவர்களை ஈரான் இழந்தது.

அதன் உற்பத்தி வசதிகள், பெட்ரோ கெமிக்கல் வளாகங்கள், எரிவாயு வயல்கள், எண்ணெய் கிடங்குகள், ரயில் தண்டவாளங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாலங்கள் கூட குண்டுவீசித் தகர்க்கப்பட்டன. ஏற்கனவே நெருக்கடியில் இருக்கும் அந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு இந்த சேதங்கள் மிகப்பெரிய பின்னடைவாகும்.

இருப்பினும், ஈரான் மூன்று முக்கியமான நகர்வுகளை மேற்கொண்டது. அதாவது குயின்சி இன்ஸ்டிட்யூட்டின் ட்ரிடா பார்சி குறிப்பிடுவது போன்று, "நீண்ட கால ஆட்டத்தை" ஈரான் விளையாட அனுமதித்தது.

முதலாவதாக, தலைமைத்துவத்தை அழிப்பது அரசின்



ஒருமைப்பாட்டையோ அல்லது திருப்பித் தாக்கும் திறனையோ பாதிக்காது என்பதை ஈரான் உறுதி செய்தது.

2025 ஜூன் போரில் பல இராணுவத் தலைவர்களை இஸ்ரேல் கொன்ற பிறகு, இத்தகைய உத்தியை ஈரான் வகுத்திருக்கலாம்.

இரண்டாவதாக, பாரசீக வளைகுடாவில் உள்ள அமெரிக்க தளங்களைத் தாக்குவதன் மூலம் ஈரான் உடனடியாக மோதலை பிராந்தியமயமாக்கியது. இந்தத் தாக்குதல்களின் துல்லியம், ஈரான் இந்த தருணத்திற்காகத் தயாராக இருந்ததைக் காட்டுகிறது.

ஜான்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் வலி நஸ்ர் 'திஇந்து' விடம் கூறியது போன்று , ஈரான் ஒட்டுமொத்த பாரசீக வளைகுடாவையும் ஒரு போர்க்களமாக மாற்றியது.

மூன்றாவதாக, ஹோர்முஸ் நீரிணையை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததன் மூலம் ஈரான் அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடங்கிய போருக்குள் உலகப் பொருளாதாரத்தையும் ஈரான் இழுத்துவிட்டது.

கடந்த சில வாரங்களாக, ட்ரம்ப் மீண்டும் மீண்டும் வெற்றியை அறிவித்தார். ஆனால் ஹோர்முஸ் நீரிணை ஈரானின் கட்டுப்பாட்டில் இருந்ததால், இத்தகைய அறிவிப்புகள் அவரது நட்பு நாடுகளைக் கூட நம்ப வைக்கத் தவறின. அமெரிக்காவிற்கு எளிதான விருப்பங்கள் எதுவும் இல்லை. ட்ரம்ப் மூன்று சாத்தியமான வழிகளை எதிர்கொண்டார்.

முதலாவதாக,அவர் வெற்றியை அறிவித்து விட்டு பின்வாங்கலாம், ஆனால் நீரிணையை ஈரானின் கைகளிலேயே விட்டுச் செல்வது ஒரு மிகப்பெரிய மூலோபாயத் தோல்வியாகக் கருதப்படும்.

இரண்டாவதாக, அவர் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தலாம், இதன் மூலம் பலத்த தாக்குதல்கள் ஈரானை பின்வாங்கச் செய்து விட்டுக் கொடுப்புகளுக்கு இணங்க வைக்கும் என்று நம்பலாம்.

ஆனால் இதில் பெரும் அபாயங்கள் இருந்தன் ஏனெனில் வளைகுடா பிராந்தியம் முழுவதும் உள்ள எரிசக்தி நிலையங்களைத் தாக்குவதன் மூலமும், ஹோர்முஸ் நீரிணையை இராணுவ ரீதியாக மூடுவதன் மூலமும் ஈரான் பதிலடி கொடுக்கக்கூடும். இத்தகைய விளைவு ட்ரம்பின் சவால்களைப் பலமடங்கு அதிகரிக்கும். அத்துடன் அமெரிக்காவை ஒரு தரைப் போர் சூழலுக்குள் இழுத்துச் செல்லக்கூடும்.

ட்ரம்ப் ஓரளவிற்கு தாக்குதலைத் தீவிரப்படுத்த முயன்றார். ஈரானின் முக்கிய ஏற்றுமதி முனையமான கார்க் தீவின் மீது அவர் குண்டுவீச்சுக்களை நடத்தினார். அதே வேளை, இஸ்ரேல் ஈரானின் தெற்கு பார்ஸ் எரிவாயு வயல்களைத் தாக்கியது.

ட்ரம்ப் பலமுறை இறுதி எச்சரிக்கைகளை விடுத்தார். ஆனால் ஒவ்வொரு முறையும் ஈரான் அவற்றை அலட்சியப்படுத்தியது அல்லது பதில் தாக்குதல்கள் மூலம் பதிலடி கொடுத்தது.

கடந்த வாரம், ஈரானுக்கு மேலாக இரண்டு அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இது தெஹ்ரானின் வான் பாதுகாப்புத் திறன்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்ற ட்ரம்பின் கூற்றுகளைத் தகர்த்தது. சுட்டு வீழ்த்தப்பட்ட எவ்15 ஈ விமானத்தின் விமானிகளை அமெரிக்காவால் மீட்க முடிந்தாலும், அந்தச் செயற்பாட்டில் மேலும் பல விமானங்களை அது இழந்தது.

ட்ரம்பின் மூன்றாவது விருப்பம், யாரிடம் நிபந்தனையற்ற சரணடைதலை அவர் கோரினாரோ, அதே ஈரானுடன் ஒரு ஒப்பந்தத்தை தேடுவதாகும். தெஹ்ரானுடன் நெருங்கிய உறவைக் கொண்ட நட்பு நாடான பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்ய, அவர் இராஜதந்திரப் பாதையைத் தேர்ந்தெடுத்தார். அதே வேளை, ஈரானின் சிவில் உள்கட்டமைப்புகளைத் தகர்த்துவிடுவேன் என்றும் மிரட்டினார். இந்த மிரட்டல்களைப் பயன்படுத்தி, தெஹ்ரானிடமிருந்து சில சலுகைகளைப் பெற்று ஒரு வெளியேறும் வழியை உருவாக்குவதே அதன் நோக்கமாகும்.

இறுதியாக, அவரது அண்மைய இறுதி எச்சரிக்கை காலாவதியாவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பாக, அவருக்கு ஒரு வெளியேறும் வழி கிடைத்தது. ஆனால் வரவிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கான கட்டமைப்பு அமெரிக்காவின் 15 அம்ச முன்மொழிவாக இருக்காது, ஈரானின் 10-அம்ச முன்மொழிவாகத்தான் இருக்கும் என்ற அவரது ஒப்புதல், போரின் போது நிலைமை எப்படி தலைகீழாக மாறியுள்ளது என்பதைக் காட்டுகிறது.

எதிர்காலத் தாக்குதல்களுக்கு எதிரான உத்தரவாதம், ஹோர்முஸ் நீரிணையின் மீது தொடர்ந்து கட்டுப்பாடு வைத்திருப்பது, யூரேனியத்தை தொடர்ந்து செறிவூட்டும் உரிமை, அனைத்து தடைகளையும் நீக்குதல், பிராந்தியத்திலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் போர் இழப்பீடு வழங்குதல் ஆகியவற்றை ஈரான் கோரியுள்ளது.

ட்ரம்பிற்கு ஒரு சலுகையாக, போர்நிறுத்தத்தின் போது ஈரானியப் படைகளுடன் "ஒருங்கிணைந்து" நீரிணை வழியாகக் கப்பல்கள் "பாதுகாப்பாகச் செல்ல" ஈரான் ஒப்புக் கொண்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் 'பாதுகாப்பான பயணம்' என்பது 'சுதந்திரமான பயணத்திற்கு' சமமானது அல்ல.

அமெரிக்க மற்றும் ஈரானிய நிலைப்பாடுகளுக்கு இடையே பெரிய இடைவெளிகள் உள்ளன, அவை ஏப்ரல் 10 அன்று இஸ்லாமாபாத் மாநாட்டில் விவாதிக்கப் படவிருந்தன. ஆனால் மஸ்கட் மற்றும் ஜெனிவாவில் நடந்த போருக்கு முந்தைய பேச்சுவார்த்தைகளை விட, ஈரான் இப்போது அதிக பலத்துடன் பேச்சுவார்த்தைக்கு வரும்.

போருக்கு முந்தைய பேச்சுவார்த்தைகளின் போது, அமெரிக்கா தாக்குதல் நடத்துவோம் என்ற மிரட்டலைப் பயன்படுத்தி தெஹ்ரானிடமிருந்து சலுகைகளைக் கோரியது. ஆனால் 40 நாட்கள் போருக்குப் பிறகு, அந்த மிரட்டல் இப்போது அதன் வீரியத்தை இழந்துவிட்டது.

(தி இந்து)

# வல்லாதிக்க ஆக்கிரமிப்பு தோல்வி: மண்டியிடா ஈரான் மக்கள் வெற்றி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் லெபனானில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதலால் ஈரான் மீண்டும் ஹோர்முஸ் நீரிணையை மூடவுள்ளது. இப்படித் தொடரும் இந்தப் போரின் குழப்பம், தவறுகள், அழிவு எவையும் இன்னமும் குறைந்து விடவில்லை. முக்கியமாக, ட்ரம்ப் பயன்படுத்திய கற்கால மனித மனோபாவம் இன்னும் தொடர்கிறது. அதாவது, போர் நிறுத்தம் வந்தாலும், அவரின் தவறான அரசியல் சிந்தனை மாறவில்லை.

எவ்வாறாயினும் தோற்காமல் இருப்பதன் மூலம் ஈரான் இந்த போரில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் வெற்றிபெறாமல் இருப்பதன் மூலம் அமெரிக்கத் தரப்பு தோல்வியை தழுவியுள்ளது. இந்த மோதலை அமெரிக்காவும் இஸ்ரேலும் கூட்டாகத் தொடங்கின. அவர்கள் ஈரானை முழுமையாகக் கட்டுப்படுத்தலாம் என்று நினைத்தனர். ஆனால், போர் விரைவில் அவர்களது கட்டுப்பாட்டை விட்டு வெளியேறியிருக்கிறது. ஈரான் ஹோர்மூஸ் நீரிணையை மூடியதால் உலக அளவில் எரிபொருளுக்கான பாதிப்பு ஏற்பட்டது. இதனால் உலகளாவிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.



நீண்ட காலமாக உலகின் பொலிஸ்காரனாக, தானாகவே உருவாக்கிய பிம்பத்தை அமெரிக்க உடைத்துள்ளது. உலக நாடுகள், அமெரிக்கா மீதான நம்பிக்கையை பாரியளவில் இழக்க ஆரம்பித்துள்ளன. அதேவேளை ஈரான் நாட்டிற்கு எதிரான ட்ரம்ப் விடுத்த அநாகரிக அச்சுறுத்தல் உலக வரலாற்றில் மிகப்பெரிய கறை படிந்த வரலாறாக கருதப்படுகிறது.

ஈரானின் புவியியல் அத்துடன் அதன் போர் வியூகங்களை கட்டுப்படுத்தத் தெரியாமல் அமெரிக்கா யுத்தம் நடத்தியது. அது இறுதியில் அமெரிக்காவின் கண்களையே பதம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தப் போரில் ஈரானைத் தோற்கடிப்பது இனிச் சாத்தியமில்லை. இதன் பொருள் என்னவென்றால், போரின் முடிவில் ஆயிரக்கணக்கான இழப்புகள் இருந்தபோதிலும், ஈரானே இறுதியில் வெற்றியாளராக மாறியுள்ளது. இந்த யுத்தத்தில் ஈரான் நேரடியாக தனித்து போரிட்டு வெற்றியீட்டி உள்ளது என்றும் கூறலாம்.

### வல்லாதிக்க ஆணவத் தோல்வி

வளைகுடாவில் போர் நிறுத்தம் வந்த பின்னர், போரின் வெற்றியை இருதரப்பும் தமது எக்காள கொக்கரிப்பாக பிதற்றிப் கொண்டுள்ளனர். ஆனாலும் இந்தப் போர், அமெரிக்காவின் சக்தியை அதிகரிக்கவில்லை. மாறாக, அதன் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நீண்ட காலமாக உலகின் பொலிஸ்காரனாக, தானாகவே உருவாக்கிய பிம்பத்தை அமெரிக்கா உடைத்துள்ளது. உலக நாடுகள், அமெரிக்கா மீதான நம்பிக்கையை பாரியளவில் இழக்க ஆரம்பித்துள்ளன. இதன் விளைவாக சீனா உலக அரங்கில் தனது செல்வாக்கினை மேம்படுத்தி வருகிறது.

கொரியா, வியட்நாம், கியூபா, ஈராக் படிப்பினைகளை அமெரிக்கா தொடர்ந்து புறக்கணித்து வந்ததன் விளைவாகவே தற்போது ஈரானில் தடம் புரண்டுள்ளது. நீண்ட காலகட்டத்தில் தனக்குத் தோல்வி தரும் அணுகுமுறைகளை தொடர்ந்தும், இன்றும் கையாள்வது ஒரு பேரரசின் வீழ்ச்சிக்கான படிக்கட்டுகளை அமெரிக்கா உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் செத்த பாம்பை தொடர்ந்து அடித்ததை போலவே தெஹ்ரானை கொடுமையாக தொடர்ந்து தாக்கியது. இறுதியில் ஈரான் வீழ்ச்சி அடைந்ததா? அல்லது இன்னும் வலுவாக மாறும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை பார்த்தால், அமெரிக்காவின் தோல்வி இலகுவாக புலப்படும்.

### இந்தப் போர் எப்படி ஆரம்பித்தது?

ட்ரம்பும் அவரது கூட்டாளிகளும் வலுப் பிரயோகம்,

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரசின் பயரங்கரவாத...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவதாக, இந்த அரசாங்கத்தினதும் அதன் தலைவர்களினதும் நோக்கங்கள் சரியானவை என்பதையும், அவர்கள் சரியான காரணங்களுக்காகவே பதவியில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்.

இரண்டாவதாக, அவர்கள் இன்னும் அதிகப்படியான பணிகளை, மிகவும் வேகமான முறையில் முன்னெடுப்பதற்கு நாம் ஊக்கமளிக்க வேண்டும். இது தற்போதைய நிலையில் மிகவும் முக்கியமானதாகும்.

**கேள்வி:-** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்து வரும் திட்டங்கள் எவை?

**பதில்:-** நீண்ட காலமாகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் எமது முன்னுரிமைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், எமது வளங்களை இந்த இரு மாகாணங்களிலும் அதிகளவில் முதலீடு செய்ய நாங்கள் முயற்சிக்கிறோம். இது எமது தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது அல்ல் மாறாக, வரலாற்று ரீதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிகக் குறைவான முதலீடுகளையே பெற்றுள்ளன என்பதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.

மேலும், இப்பகுதிகளில் வறுமை விகிதம் மிகவும் உயர்வாகக் காணப்படுகின்றது. ஏனைய மாகாணங்களை விட பொருளாதார அபிவிருத்திக்கான வாய்ப்புகள் இங்கு குறைவாகவே உள்ளன. எனவே, வடக்கு மற்றும் கிழக்கில் கூடுதல் முதலீடுகளைச் செய்வதை எமது பொறுப்பாகவே நாங்கள் கருதுகிறோம்.

தற்போது நாம் பின்வரும் முக்கிய துறைகளில் கவனம் செலுத்தி வருகின்றோம்: மீள்குடியேற்றம் மற்றும் காணி விவகாரங்கள்: இடம்பெயர்ந்த மக்களின் மீள்வருகை, அவர்களது மீள்குடியேற்றம் மற்றும் காணித் தகராறுகளைக் கையாள்வதில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகிறோம். இதுவே எமது பிரதான முன்னுரிமையாகும்.

வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு: இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பெண்களின் தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் இப்பகுதிகளுக்கு அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கான சூழலை ஏற்படுத்துதல் என்பவற்றில் கவனம் செலுத்துகிறோம்.

பொதுச் சேவைகள் மற்றும் நல்லாட்சி: பொதுச் சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், சிறந்த ஆட்சிமுறையை மேம்படுத்துவதற்கும் நாம் பங்களிப்பு செய்கிறோம். அண்மையில்கூட உள்ளூராட்சி நிர்வாகங்களை வலுப்படுத்தும் மிக முக்கியமான செயற்திட்டம் ஒன்றினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்: சமூகங்களிடையே நம்பிக்கையை வளர்த்தல், நல்லிணக்கப் பணிகளை முன்னெடுத்தல் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரல்களைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.

**கேள்வி:-** யுத்தத்தின் போது காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வுகாண ஐக்கிய நாடுகள் சபையிடம் உள்ள திட்டம் என்ன?

**பதில்:-** முதலாவதாக ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது தொடர்பாக எங்களிடம் எவ்விதத் தனிப்பட்ட திட்டமும் இல்லை. எதனையும் திட்டமிடுவது ஐக்கிய நாடுகள் சபையின் பணியும் அல்ல. முதன்முதலாக, இது குறித்த திட்டத்தை அரசாங்கமே கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் மற்றும் இந்தச் சமூகம் தான் இதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையாகிய நாங்கள், அத்தகைய திட்டங்களுக்குத் தேவையான ஆதரவை மட்டுமே வழங்க முடியும்.

அரசாங்கமும் இந்தச் சமூகமும் இணைந்தே காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தை உருவாக்கத் தீர்மானித்தன. எனவே, அந்த அலுவலகம் முறையாகச் செயற்படவேண்டும் அது முடிவுகளை வழங்க வேண்டும். காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறியும் நோக்கிலேயே நீங்கள் ஒரு நிறுவனத்தை உருவாக்கினீர்கள். ஆனால், இதுவரையில் அவர்கள் எவரையும் கண்டறியவில்லை என்பது ஒரு பாரிய பிரச்னையாகும்.

எமது பார்வையில், தற்போது இப்பணிகளில் "தொழில்முறைத் தகைமை" அவசியமாகின்றது. குறிப்பாக, மனிதப் புதைகுழிகள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் தேடுதல் பணிகளில் நிபுணத்துவ அணுகுமுறை தேவைப்படுகிறது. காணாமலாக்கப்பட்டோர் குறித்த முறைப்பாடுகளைப் பெற்று, அவற்றை உரிய நபர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் ஒரு பிரிவு அந்த அலுவலகத்தில் உள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறிய டி.என்.ஏ. பரிசோதனைகளை விடவும் மேலதிகமான பல வழிகள் உள்ளன. மக்களின் சாட்சியங்கள் மற்றும் நினைவலைகள் மூலம் பல தகவல்களைப் பெற முடியும். எனவே, காணாமலாக்கப்பட்டவர்களைக் கண்டறிய தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டியது அந்த அலுவலகத்தின் பொறுப்பாகும்.

நாங்கள் இதற்குப் பயிற்சி, நவீன கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் மூலம் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அத்தகைய உதவிகளைக் கோருவதில் அரசாங்கமும் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகமும் இன்னும் வெளிப்படைத்தன்மையுடன் முன்வரவில்லை. எமது ஆதரவைப் பெற்றுக்கொண்டு இப்பணிகளைத் துரிதப்படுத்துவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:-** யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்படும் விசேட திட்டங்கள் எவை?

**பதில்:-** ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் பல தசாப்தங்களாகப் பணியாற்றி வருகின்றது. யுத்தத்திற்கு முன்னரும், யுத்த காலத்திலும், யுத்தம் முடிந்த பின்னரும் நாம் இங்கேயே இருந்திருக்கிறோம். கடந்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கும், விவசாயம் மற்றும் நகரப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கும் பல்வேறு திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தோம்.

குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக பல விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. உதாரணமாக, போரினால் கணவன்மாரை இழந்த விதவைகள் சுயமாக உணவகங்களை நடத்தி, அதன் மூலம் வருமானம் ஈட்டும் வணிக முயற்சிகளுக்கு நாம் ஆதரவளித்தோம். அண்மையில் கூட, மாற்றுத்திறனாளிகளுக்குப் பயிற்சி அளித்து அவர்களை வேலைக்கு அமர்த்தும் ஒரு சங்கத்திற்கு நான் விஜயம் செய்திருந்தேன். இவ்வாறு பல ஆண்டுகளாக நாம் பல்வேறு பணிகளைச் செய்துள்ளோம்.

யுத்தம் முடிந்து தற்போது 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இத்தகைய நேரடி உதவித் திட்டங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. தற்போது நாம் காணி மற்றும் வீட்டு வசதி தொடர்பான பிரச்னைகளுக்கே அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றோம். யுத்தத்தினால் இடம்பெயர்ந்து இன்னும் மீளாதவர்களுக்கும், இந்தியாவிலிருந்து மீண்டும் இலங்கை திரும்பும் மக்களுக்கும் நாம் தொடர்ந்து உதவி வருகின்றோம். இருப்பினும், காலமாற்றத்திற்கு ஏற்ப இத்தகைய திட்டங்களின் அளவு தற்போது குறைவடைந்துள்ளது.

## றிச்சர்ட் நிக்சனின் 'பைத்தியக்காரன்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

"1972 ஆம் ஆண்டில் நிக்சனின் இந்த பாசாங்குக ளுக்கு மத்தியிலும் வியட்நாம் போர் மேலும் தீவிரமாக நடந்துகொண்டிருந்தபோது அவர் தனது தேசிய பாது காப்பு ஆலோ சகர் ஹென்றி கீசிங்கரிடம் கம்யூனிஸ்ட் வட வியட்நாமுக்கு எதிராக அணுவா யுதங்களைப் பயன்படுத்த விரும்புவதாக தெரிவித்தார்" என்று சம்மர் ஸின் நூலில் பதிவாகியிருக்கிறது.

நிக்சன் வடவியட்நாம் மீது எவ்வளவுதான் குண்டு வீச்சுக் களை நடத்தி உயிரிழப்புகளையும் அழிவுகளை யும் விளை வித்த போதிலும், இறுதியில் வியட்நாம் கம் யூனிஸ்டுகள் தங்களது நாட்டை அமெரிக்க ஆக்கிரமிப் பில் இருந்து 1975 ஏப்ரிலில் விடுவித்து ஐக்கியப்படுத்தி வரலாறு படைத்தார்கள்.

ஈரானின் முழு நாகரிகத்தையும் மீட்டெடுக்க முடி யாத வகையில் முற் றாக அழிக்கப்போகிறேன் என்றும் பாலங்கள், ரயில் நிலையங்கள், எண் ணெய்வள நிலை கள் மற்றும் சிவிலியன் இலக் குகளை நிர்மூலம் செய்யப் போகிறேன் என் றும் ட்ரம்ப் விடுத்த அட்டகாசத்தன மான அச்சுறுத்தல்க ளைச் செய்த மறுநாளே போர் நிறுத்தத்துக்கு இணங்க வேண்டிய நிலைக் குத் தள்ளப் பட்டார்.

ட்ரம்பின் இன்றைய நிலை நிக்சனின் அன்றைய நிலையை நினை வுக்கு கொண்டுவருகிறது. சுமார் ஆறு வார கால குண்டு வீச்சுக்களுக்கு பின்னரும் கூட ஈரான் அடிபணியும் அறிகுறிகளைக் காட்டாத நிலையில் ட்ரம் புக்கும் நிக்சனைப் போன்றே தான் பலவீனமாகத் தெரிவ தைத் தவிர்க்க ஒரு உபா யம் தேவைப் பட்டது. அதற் காக பேரழிவு மிரட்டல் கள் ஒரு வசதியான கருவியாக இருக்கும் என்று நம்பியிருக் கக்கூடும்.

சர்வதேச நெருக்கடிக் குழுவின் ஈரான் திட்ட இயக்கு நர் அலி வேஸ் கூறி யிருப்பதைப் போன்று இந்த மோத லில் இதுவரை ட்ரம்பினால் எந்தவொரு தெளிவான வெற்றியையும் பெறமுடி யவில்லை என்பதால் விமர்ச கர்கள் தனது வெற்றிச் செய்தியில் ஓட்டைகளைத் தேட முடியாதவாறு ஒரு மாபெ ரும் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு விட்டு, அதையே வெற்றியாக அறி வித்து தானே உருவாக்கிய நெருக்கடியில் இருந்து வெளியேறு வதற்கு முயற்சித்தார். ஆனால், அது பலிக்கவில்லை. ●

## வல்லாதிக்க ஆக்கிரமிப்பு தோல்வி:...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி, பலம் போன்றவை தான் உலகத்தை நிர்ணயிக்கிறது என்ற நம்பிக்கை உடையவர்கள். ட்ரம்ப் பயன்படுத்திய ஒரு நாகரிகம் முழுவதும் அழிந்து போகலாம் போன்ற மிரட்டல்கள் மனித மாண்பினைச் சிதைத்தன. இங்கு நவீன அறிவியல் இராஜதந்திரம் இல்லை. பழமையான, கற்கால சிந்தனைப் போக்கு மேலெழுந்தது.

நாங்கள் எல்லா இலக்குகளையும் அடைந்தோம், வெற்றி பெற்றோம் என ட்ரம்ப் சொன்னாலும், ஆயிரக் கணக்கான பொது மக்களே இந்தப் போரினால் உயிரி ழந்து உள்ளார்கள். பல்கலைக்கழகங்கள், கலை கலாச்சா ரப் பேணிடங்கள் அழிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அமெ ரிக்காவின் செல்வாக்கு உலகளாவிய ரீதியில் கேலிக்குள் ளாக்கப் படுகின்றது. உலகளாவிய பொருளாதார நெருக் கடி உருவாகிப் பொதுமக்கள் துன்பத்துக்கு உள்ளாகி யுள்ளனர்.

என்னதான் இராணுவ ரீதியாக இருந்தாலும், ஈரான் நாட்டிற்கு எதிரான ட்ரம்ப் விடுத்த அநாகரிக அச்சுறுத் தல் உலக வரலாற்றில் மிகப்பெரிய கறை படிந்த ஒன்றாக கருதப்படுகிறது. ஈரானின் விளக்குகள் எல்லாம் அணைந்து விடும், நாடே இருளில் மூழ்கும், ஒரு நாகரீகமே அழிந்து விடும் என்ற ஆணவ வசனங்களால் உலகையே பதட்டம் கொள்ளச் செய்தார்.

### ஈரான் மக்கள் காட்டிய வெளிச்சம்

ட்ரம்பின் அச்சுறுத்தல்கள் வெளியானதன் பின்னர், நிச்சயம் அந்த இரவு உலகில் பலருக்குமே தூக்கமில்லா இரவாகத் தான் அமைந்திருக்கும். ஆனால் ஈரான் மக்கள் பயத்தின் இருளுக்குள் சென்றிடவில்லை, ஒரு அங்குல மும் அவர்கள் பின்வாங்கவில்லை. அவர்கள் தாங்கள் தான் ஈரான் நாட்டின் உயிர்துடிப்பு என்பதை உலகிற்கே உணர்த்தினார்கள். அந்த இரவின் பொழுதில் அவர்கள் காட்டிய வீரம் என்பது வரலாற்று நிகழ்வாகவே தோன் றியது.

ஈரானில் இஸ்பஹானின் மூடுபனியில் இருந்து தப்ரிஸ் நகரின் தொழில்துறை பகுதிகள் வரை மக்களால் வரலாறு எழுதப்பட்டது. கோடிக்கணக்கான மக்கள் மனித மதில் சுவர்களாக மாறினார்கள். தாக்குதலுக்கான இலக்குகளாக அவர்களே உருமாற்றம் பெற்றார்கள். தெஹ்ரானில், தபி யத் பாலம் நள்ளிரவு கீதத்தின் மேடையாக மாறியது. அங்கு தார் இசையின் தாளங்களுக்கு கலைஞர்கள் நடம னாடினார்கள். உலகமே பதட்டத்தில் உறைந்து கிடக்கும் நேரம் அவர்கள் இசையும் நடனமுமாக லயித்திருந்தார்கள்.

முழுமையான அழிவு என்ற அச்சுறுத்தலுக்கு எதிரான பண்பாட்டு எழுச்சி. மின் நிலையங்களை ஒளிக் காட்சி யகங்களாகவும், பாலங்களை மனித சங்கிலிகளாகவும் மாற்றிய மக்கள், "Power Plant Day" என்ற தாக்குதல் தர்க்கத்தை மக்கள் தைரியத்தின் ஒளியால் செயலிழக்கச் செய்தனர். ஆம் உலகில் மீண்டும் பாரசீக கலாச்சாரத்தை காத்தனர்.

### பாரினை ஆண்ட பாரசீகம்:

இருளை ஒளியால் வென்ற ஈரான் மக்களைப் போல, பயம் அல்ல, அன்பே என்றனர். அழிவு அல்ல, கருணை என்றனர். போர் அல்ல, மனிதம் இவையே உலகை காக் கும் சக்திகள் என்றனர். ஈரான் முழுவதுமே எதிர்ப்பு பல் வகைமைகள் கொண்டதாக, விரிவானதாக ஒன்றை விட ஒன்று வீரியமானதாகவே இருந்தது. ஒவ்வொரு நகரமும் தேசிய பாதுகாப்பின் ஓர் நூலாக தன்னை நெய்தது. புஷேர் நகரின் தெற்கில், மாணவர்களும் தொழிலாளர்க ளின் குடும்பங்களும் அணு நிலையத்துக்குச் செல்லும் சாலைகளில் பெரிய சுவரோவியங்களை வரைந்தனர். அவை மேலே பறக்கும் விமானிகளுக்கும் செயற்கைக் கோள்களுக்கும் அமைதியின் செய்திகளை வெளிப்படுத்தின.

கெர்மான்ஷா மற்றும் அஹ்வாஸ் நகரங்களில், ஆயி ரக்கணக்கான மக்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தி, மருத்து வமனைகளையும் வீடுகளையும் சுற்றி அரண் அமைத்த னர். தங்களின் வாழ்வாதாரத்தை உத்திரவாதப் படுத்தும் மின் நிலையங்களின் வாயில்களை விட்டு நகர மறுத்த னர். இவை ஒளியின் கவசங்கள் என அழைக்கப்பட்டன. வீதிகள் எங்கும் உணர்வின் மணமும், கவிதை வாசித்த லின் ஓசையும் காற்றில் நிரம்பியிருந்தது.

அலி காம்சாரி மற்றும் பென்யாமின் பகதூரி போன்ற கலைஞர்கள் சாதாரண மக்களுடன் தோளோடு தோள் நின்று முழக்கத்தை தெருக்களில் எழுப்பினர். மக்களின் இதயத் துடிப்பு உலகம் முழுவதிலும் கலைஞர்கள் ஒலிக் கச் செய்தார்கள். இந்த வரலாற்றுச் செயல்பாடு ஒரு தற் காலிக பாதுகாப்பை விட ஒரு படி மேலே சென்றது. இதுவே பாரசீக மக்களின் மரபு என்பதை புரிந்துகொள்ள முடிந்தது.

### ஈரானிய மக்கள் ஒற்றுமை:

ஒன்றரை கோடி மக்கள் ஒரு இரவில் தங்களின் நாட்டை காக்க முதல் முறையாக கூடினார்கள். ஈரான் மக்கள் ஒன்றுகூடிய அந்த தருணம் 21 ஆம் நூற்றாண்டின் மறக்க முடியாத நிகழ்வாகும். எங்கள் பாலங்கள், எங்கள் மின் இணைப்புகள் என்ற அவர்களின் முழக்கம், நேரடி பதிலாக அமைந்தது. கலை மூலம் தெருக்களையும், இசை மூலம் தொடுவானத்தையும் நிரப்பிய ஈரானியர் கள், போர் இயந்திரங்களுக்கு எதிராக தங்களின் அசாத் திய எதிர்ப்பை வெளிபடுத்தினார்கள்.

போர்களை இந்த உலகம் மறுபரீசீலனை செய்ய வேண் டும் அதுவே அப்பாவி மக்கள் இந்த உலகிற்கு விடுக்கும் செய்தியாகும். உலகம் முழுவதும் நடைபெற்ற எல்லா போர்களிலும் எளிய மக்களும் அவர்களது உடைமைகளும் அவர்களது வாழ்வாதாரமுமே முதன்மையாக பாதிக்கப் பட்டு அவர்கள் வாழ்வு தான் மிகுதியாக சிதைந்துள்ளது.

### அமெரிக்காவின் இராஜதந்திர தோல்வி:

அமெரிக்காவிற்கு இது ஒரு யுத்தத் தோல்வி மட்டு மல்ல. அமெரிக்காவுக்கு பெரும் இராஜதந்திர நெருக்க டியும், இராஜதந்திரத் தோல்வியும் ஆகும்.

ஒரு புறம் அமெரிக்கத் தலைவர் தனது வாயால் உல கின் வெறுப்பை சம்பாத்தித்துக் கொண்டே செல்லும் அதே வேளை ஈரான் அதிபரின் உரைகள் நாகரீக இரா ஜதந்திரம் மிகுந்த கருத்துக்களால் உலகைக் கவர்ந்து கொண்டிருகின்றது. அமெரிக்க மக்களுக்கு எழுதப்பட்ட ஈரான் அதிபரின் கடிதம் அதற்கொரு சிறந்த உதாரணம்.

போரின் இறுதியில் ஈரான் மக்களின் தைரியம், கலாச் சாரத்தின் ஒளி, மனித நேயத்தின் சக்தி எல்லாம் மிக அழ காக வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிகழ்வுகள் பெரிய உண்மையையும் வரலாற்றையும் வெளிப்படுத்தி உள்ளன.

போர் எந்தக் காலத்திலும் ஒரு தீர்வு அல்ல. அன்பும் மனித நேயமும் தான் இறுதி தீர்வு. மனிதர்கள் உருவாக் கிய எல்லா மதங்களும், எல்லா எல்லைகளும், எல்லா வேறுபாடுகளும் ஒரு பக்கமிருக்க, ஒவ்வொரு உயிரும் மதிப்புக்குரியது என்பதே உலகம் மறக்கக் கூடாத உண்மையாகும்.

மதம், இனம், மொழி, நாடு, இவை எல்லாம் மனிதன் உருவாக்கிய அடையாளங்கள். ஆனால் உயிர் என்பது இயற்கை நமக்குத் தந்த ஒரே உண்மையான அடையா ளம். அதை மதிப்பதே நம் கடமை. உலகம் முழுவதும் அப்பாவி மக்கள்தான் போர்களின் முதல் பலி. அதனால் தான் போர் முடிவுகளை உருவாக்காது. இதனை உணர்ந்து அமெரிக்கா எதிர்காலத்தில் அமைதியை பேணுமா அல் லது மீண்டும் போர்முகம் கொண்டு அலையுமா என் பதை அமெரிக்க மக்களே தீர்மானிக்க வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி காணிகளை...

உறுதி செய்யப்பட்ட பின்னர், மிக விரைவான காலப் பகுதிக்குள் அந்தக் காணிகளை மீண்டும் மக்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

தையிட்டியில் தனியார் காணிகளைச் சுவீகரித்து சட்டவிரோதமான முறையில் விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அப்பகுதி மக்கள் மற்றும் அரசியல் தரப்பினர் நீண்ட காலமாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

புதிய அரசாங்கம் பதவியேற்றதைத் தொடர்ந்து, இந்தக் காணிகளை விடுவிப்பதற்கான இராஜதந்திர நகர்வுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தியாகி அன்னை...

நடைமுறைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் மாத்திரம் ஊர்தி சிறிது நேரம் நிறுத்தி வைக்கப்பட்டு உரிய விசாரணைகள், சோதனைகளுக்கு பின்னர் ஊர்தி தனது பயணத்தைத் தொடர அனுமதி வழங்கப்பட்டதாகவும்,

தவறான புரிதல் காரணமாகவே ஊர்தி தடுக்கப்பட்டதாகச் செய்திகள் பரவியதாகவும், சட்ட ரீதியான நடைமுறைகளைப் பின்பற்றியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (அ)

## உர விவகாரம்...

விவரங்களுடன் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன். ஊழல்மிக்க ராஜபக்ஷர்களும் இதில் முன்னிலையில் உள்ளார்கள். என் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் அமைச்சு பதவியில் இருந்து அனைத்தையும் தருகிறேன் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஊழலுக்கு எதிரான கொள்கையை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறோம். அரசாங்கத்தின் சகல உறுப்பினர்களும் ஊழலுக்கு எதிராகவே செயல்படுகிறார்கள்.

ஊழலுக்கு எதிராக செயல்படும் எமது கொள்கையை சவாலுக்குட்படுத்தும் தகுதி எதிர்க்கட்சியினருக்கு கிடையாது. ஏனெனில் கடந்த காலங்களில் அரச நிதியை கொள்ளையடித்தவர்கள் தான் இன்று ஊழலுக்கு எதிராக பேசுகிறார்கள்.

ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதால் எம்மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை. மக்களின் ஒரு சதத்தை கூட நான் மோசடி செய்யவில்லை. அவ்வாறு மோசடி செய்திருந்தால் அவற்றை ஆதாரத்துடன் நிரூபியுங்கள்.

நிலக்கரி கொள்வனவு பற்றி பேசப்படுகிறது. இதுவரை காலமும் இடம்பெற்ற தவறான முறைமை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நிலக்கரி விநியோகத்தர்களுடன் நான் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளவில்லை.

ராஜபக்ஷ முகவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை இடை நிறுத்தியதால் போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. பொதுஜன பெரமுனவின் தாளத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆடுகிறார்கள்.

யோசித ராஜபக்ஷவின் நண்பரின் நிறுவனத்திடமிருந்தே கடந்த காலங்களில் நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டது. இந்த முறைகேடான கொள்முதலை மாற்றியமைத்ததால் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை எவராலும் பலவீனப்படுத்த முடியாது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம்”- என்றார். (எ)

## அமெரிக்கா...

வெளியிடப்பட்டுள்ளது.

ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுடனும் சுமுகமான உறவைப் பேணும் பாகிஸ்தான், இந்த நெருக்கடியான சூழலில் இரு தரப்புக்கும் இடையிலான முக்கிய செய்திகளைப் பரிமாறும் பாலமாகச் செயற்பட்டு வருகிறது.

பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றத்தைத் தணித்தல் மற்றும் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள சில முக்கிய விவகாரங்களுக்குத் தீர்வுகாணல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டே இந்தப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தகவல்கள் ஆரம்பகட்ட இராஜதந்திர நகர்வுகளாகப் பார்க்கப்பட்டாலும், உத்தியோகபூர்வமாக இரு தரப்பு நேரடிப் பேச்சுவார்த்தைகள் எப்போது ஆரம்பமாகும் என்பது குறித்து இன்னும் தெளிவான அறிவிப்புகள் எதுவும் வெளியாகவில்லை. (அ)

## புத்தாண்டு காலத்தை...

என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் தலைவர் டி.ஜே. ராஜகருணா இந்தத் தகவலை வெளியிட்டார்.

எரிபொருள் விநியோகத்தில் கியூ.ஆர். முறை தளர்த்தப்பட்ட போதிலும், வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒரு முக்கிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கம் ஒற்றை எண் மற்றும் இரட்டை எண் அடிப்படையில் எரிபொருள் வழங்கும் முறை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும். பண்டிகைக் காலத்தில் மக்கள் அதிக தூரம் பய ணிக்க வேண்டியிருப்பதாலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் உருவாவதைத் தவிர்க்கும் பொருட்டுமே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18-ஆம் திகதிக்குப் பின்னர் வழமை போன்று கியூ.ஆர். முறையின் கீழ் எரிபொருள் விநியோ கம் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## நெடுந்தீவு உட்பட...

அடிப்படையில் புதிய சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும், இந்த வகைப்படுத்தலில் சிக்கல்கள் இருப்பதை அமைச்சு கண்டறிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த வகைப்படுத்தல் செயல்பாட்டில் எங்கு தவறு நடந்தது என்பதைக் கண்டறிந்து அதனைச் சரி செய்ய ஒரு விசேட குழு நியமிக்கப்படவுள்ளது.

அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தகுதியான ஆசிரியர்களுக்கு மீண்டும் கொடுப்பனவுகளை வழங்கத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என செயலாளர் உறுதியளித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வழங்கிய தகவலின்படி, பின்வரும் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் கஷ்டப் பிரதேச பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்:

நெடுந்தீவு: 8 பாடசாலைகளைச் சேர்ந்த 92 ஆசிரியர்கள்.

நயினாதீவு: 3 பாடசாலைகளைச் சேர்ந்த 46 ஆசிரியர்கள்.

அனலைதீவு: 3 பாடசாலைகளைச் சேர்ந்த 23 ஆசிரியர்கள்.

எழுவைதீவு: 2 பாடசாலைகளைச் சேர்ந்த 13 ஆசிரியர்கள்.

இதேவேளை, தேசிய பாடசாலைகளின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிலையான கொடுப்பனவு 12,500 ரூபாவிலிருந்து 25,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அளவு அல்லது மாணவர் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் அனைத்து தேசிய பாடசாலைகளுக்கும் சமமாக 25,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

ஒரு மாதத்தின் மின்சாரக் கட்டணம் இந்தத் தொகையைத் தாண்டும் பட்சத்தில், எஞ்சிய தொகையை அந்தந்த பாடசாலைகளே சுயமாக முகாமைத்துவம் செய்யவேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக பாடசாலைகள் பெரும் நெருக்கடியைச் சந்திப்பதாகவும், முன்பு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் தற்போது நீக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். (அ)

## இலங்கையில்...

ஆண்களும், 11,269,456 பெண்களும் உள்ளனர். இவற்றில் மொத்தம் 5,417,431 ஆண்களும், 5,743,647 பெண்களும் திருமணமான நிலையில் உள்ளனர்.

ஆண்களில் 4,808,324 பேரும், பெண்களில் 4,291,826 பேரும் ஒருபோதும் திருமணம் செய்யாதவர்கள் எனப் பதிவாகியுள்ளனர்.

பெண்களில் 1,058,997 பேர் கைம்பெண்களாக உள்ளனர், இது ஆண்களின் எண்ணிக்கையை (175,421) விட கணிசமாக அதிகமாகும்.

15 வயதிற்குட்பட்ட பிரிவில் 18 பெண்கள் திருமணமானவர்களாகப் பதிவாகியுள்ளனர். 15-19 வயதுக்குட்பட்ட பிரிவில் 8,458 ஆண்களும் 30,199 பெண்களும் திருமணமானவர்களாக உள்ளனர்.

சட்டப்பூர்வமாகப் பிரிந்தவர்கள் மற்றும் சட்டபூர்வமின்றிப் பிரிந்தவர்களின் எண்ணிக்கையில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் உள்ளனர்.

இலங்கையின் 2024 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பின்படி, திருமணமான நிலையில் இருந்து பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழ்பவர்கள் தொடர்பான விரிவான புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் பிரிந்து வாழ்பவர்கள் சட்டபூர்வமாகப் பிரிந்தவர்கள் மற்றும் சட்டபூர்வமின்றிப் பிரிந்தவர்கள் என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1. சட்டபூர்வமாகப் பிரிந்தவர்கள்

இவர்கள் நீதிமன்ற உத்தரவு அல்லது முறையான சட்ட வழிமுறைகள் மூலம் பிரிந்து வாழ்பவர்கள் ஆவர். இலங்கையில் மொத்தம் 44,904 பேர் சட்டபூர்வமாகப் பிரிந்து வாழ்கின்றனர்.

இதில் ஆண்களின் எண்ணிக்கை 17,047 ஆகவும், பெண்களின் எண்ணிக்கை 27,857 ஆகவும் காணப்படுகிறது. பெண்களே ஆண்களை விட அதிகளவில் சட்டபூர்வமாகப் பிரிந்து வாழ்கின்றனர்.

35-39 வயதுடைய பிரிவில் அதிகபட்சமாக 5,912 பேர் சட்டபூர்வமாகப் பிரிந்துள்ளனர். குறைந்தபட்சமாக 15-19 வயதுடையவர்களில் 41 பேர் மாத்திரமே இவ்வாறான நிலையில் உள்ளனர்.

2. சட்டபூர்வமின்றிப் பிரிந்தவர்கள்

பரஸ்பர சம்மதத்துடன் அல்லது வேறு காரணங்களுக்காக முறையான சட்டப் பிரிவினை இன்றித் தனியாக வாழ்பவர்கள் இதில் உள்ளடங்குவர்.

இலங்கையில் மொத்தம் 166,895 பேர் சட்டபூர்வமின்றிப் பிரிந்து வாழ்கின்றனர். இது சட்டபூர்வமாகப் பிரிந்தவர்களின் எண்ணிக்கையை விட சுமார் 3.7 மடங்கு அதிகமாகும்.

இதில் ஆண்கள் 65,169 பேரும், பெண்கள் 101,726 பேரும் அடங்குகின்றனர். இங்கும் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

40-44 வயதுடைய பிரிவில் அதிகபட்சமாக 25,616 பேர் இவ்வாறு பிரிந்து வாழ்கின்றனர்.

வயது அதிகரிக்கும்போது (65 வயதிற்கு மேல்), இந்தப் பிரிவில் உள்ளவர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்குகிறது.

இந்தத் தரவுகளின் அடிப்படையில், இலங்கையில் விவாகரத்து பெற்றவர்களை (74,355 பேர்) விட, விவாகரத்து பெறாமல் சமூக அல்லது சட்ட ரீதியாகப் பிரிந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை (211,799 பேர்) மிக அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பயணிகள்...

நகர அபிவிருத்தி அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2026 ஜனவரி 17 ஆம் திகதியிட்ட இலக்கம் 2471/68 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

முன்னைய சட்டத்தின்படி, வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை மற்றொருவருக்கு மாற்ற முடியாது இருந்தது.

இதனால் பஸ் உரிமையாளர்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் பல்வேறு நிர்வாகச் சிக்கல்களை எதிர்நோக்கினர்.

இதற்குத் தீர்வாக, 2025 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தின் மூலம், அனுமதிப் பத்திரங்களை மற்றுமொரு தரப்பினருக்கு கைமாற்றுவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. இதற்கான சட்ட ரீதியான தகுதிகள் குறித்த விதிமுறைகளே தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பஸ் கட்டணங்களை உயர்த்துவது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

எரிபொருள் விலை உயர்வைக் கருத்திற் கொண்டு பஸ் கட்டணங்களை உயர்த்துவதற்கான அமைச்சரவை அனுமதி கோரப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், பொதுமக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் பேருந்து பணிப் பகிஷ்கரிப்புகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கம் எப்போதும் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் பயணிகள் என இரு தரப்பினரையும் கருத்திற் கொண்டே தீர்மானங்களை எடுக்கும்-என்றார். (அ)

## ஏப்ரல் 15,16...

திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாகவும் தடையின்றியும் வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில், அனைத்து அரச அலுவலகங்களையும் வழமை போல் இயக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை வருகிறார்...

துறையில் புதிய முதலீடுகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக, கூட்டு உற்பத்தி முயற்சிகள், பெறுமதி சேர்க்கப்பட்ட மீன் தயாரிப்புகள் மற்றும் இலங்கையிலிருந்து நேரடியாக மாலைதீவுக்கு மீன் ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து இதன்போது முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# நிலக்கரி முறைகேடுகள்:
# ஜனாதிபதியின் செயலர் சி.ஐ.டியிடம் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 11

2009ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் குறித்தும் முறையான விசாரணை நடத்துமாறு கோரி, ஜனாதிபதி செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை அளித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு முதல் இது வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து நிலக்கரி கப்பல்கள் மற்றும் கொள்வனவு நடைமுறைகள் குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு அதில் கோரப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக ஊடகங்கள், பாராளுமன்றம் மற்றும் சமூக வலைதளங்களில் நிலக்கரி இறக்குமதியின்போது இடம்பெற்றதாக நம்பப்படும் பாரிய ஊழல் மற்றும் மோசடிகள் குறித்துப் பலத்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மிகுந்த அவதானம் செலுத்தி வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த முறைகேடுகள் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி வழங்கிய நேரடி அறிவுறுத்தலின் பேரிலேயே, ஜனாதிபதி செயலாளர் இந்த முறைப்பாட்டை நேற்று சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உரம் குறித்து விவசாயிகள் அச்சமடைய தேவையில்லை

### பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன

கொழும்பு, ஏப். 11

நாட்டில் தற்போது நிலவும் உர இருப்பு குறித்து விவசாயிகள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும், தேவையான அளவை விட அதிகமான உர இருப்புக்கள் தற்போது நாட்டில் உள்ளதாகவும் கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கல் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று மொரகொல்லகம விவசாய சேவை மையத்தில் உர விநியோக நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெரும் போக நெற்செய்கைக்குத் தேவையான எம்.ஏ.டி. உரம் மற்றும் எம்.ஓ.பி. உரம் ஆகியவை தேவைக்கும் அதிகமான அளவில் நாட்டில் கையிருப்பில் உள்ளன. கடந்த சிறு போகத்தில் சுமார் 13,000 தொன் எம்.ஓ.பி உரம் பயன்படுத்தப்பட்டபோதிலும், தற்போது நாட்டில் 38,000 தொன் கையிருப்பில் உள்ளது. யூரியா உரத்திற்கு நிலவிய சிறிய தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு, புதிதாக 25,000 தொன் யூரியா உரத்தை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது. இந்த உரங்கள் தற்போது விவசாய சேவை மையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. உலக சந்தையில் உர மூட்டை ஒன்றின் சில்லறை விலை 17,000 ரூபாவாக உயர்ந்துள்ள நிலையில், அரசாங்கத்தின் தலையீட்டின் மூலம் ஒரு மூட்டை உரத்தை 10,200 ரூபா சலுகை விலையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு ஹெக்ரேயர் நிலப்பரப்பிற்கு முன்னதாக வழங்கப்பட்ட 30,000 ரூபா உர மானியம், புதிய அரசாங்கம் பதவியேற்றவுடன் 50,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. தற்போது அந்த மானியம் 60,000 ரூபாய் வரை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## வட்டு. மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப். 12

வட்டு மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆரம்பத்தில் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை என்று ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மாத்திரமே காணப்பட்டது. அதனை தொடர்ந்து வட்டு மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது.

ஆரம்ப பிரிவு திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும், இடைநிலை மற்றும் உயர்தர பிரிவு வட்டு மத்திய கல்லூரியிலும் காணப்படுகிறது.

நேற்றைய நூற்றாண்டு விழாவின் போது திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் இருந்து மேற்கத்திய இசை வாத்தியங்கள் முழங்க, நடைபவனி ஒன்று வட்டு மத்திய கல்லூரிவரை முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் கல்லூரியில் அமைந்துள்ள சரஸ்வதி திருவுருவச் சிலைக்கு நிறுவுனரின் பரம்பரை வழிவந்தவர்கள் மலர்மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டதை தொடர்ந்து இறைவணக்கம் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒளி தீபத்தை ஏந்தியவாறு மேடையை அலங்கரித்த னர்.

தொடர்ச்சியாக வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமையுரை, மாணவர்களினதும் பழைய மாணவர்களினதும் கலை நிகழ்வுகள், பட்டி மன்றம் பிரத விருந்தினர் உரை என்பன இடம்பெற்று, நன்றியுரையுடன் விழா நிகழ்வுக்கு வந்தது.

கல்லூரியின் முதல்வர் வதனி தில்லைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம அதிதியாக ஸ்தாபகர் குடும்பத்தை சேர்ந்த திரு. திருமதி வெற்றிவேல் பிள்ளை கலந்து சிறம்பித்ததுடன், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள் - ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ-05)

## தற்காலிக போர் நிறுத்தம் இலங்கை அரசு வரவேற்பு

கொழும்பு, ஏப். 12

மத்திய கிழக்கில் தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளதையும், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கான வாய்ப்புகளையும் இலங்கை அரசாங்கம் வரவேற்றுள்ளது.

இந்த முன்னேற்றமானது பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தைத் தணிக்கவும், பொதுமக்களின் மனிதாபிமானத் துயரங்களைக் குறைக்கவும் எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான நடவடிக்கையாகும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பிராந்தியத்தில் நிரந்தரமான மற்றும் நிலையான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது.

பிராந்தியத்திலுள்ள அனைத்து சமூகங்களினதும் நீண்டகால ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், உள்ளடக்கிய அமைதிப் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தை இலங்கை வலியுறுத்தியுள்ளது.

இந்தப் போர் நிறுத்தத்தை சாத்தியப்படுத்தவும், பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவும் தூதரக ரீதியாகப் பங்களிப்பு செய்த நாடுகளுக்கும் இலங்கை அரசாங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. (அ)

## வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு கொள்கை ரீதியான தெளிவு அவசியம்!

### அமெரிக்க வர்த்தகச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஏப். 12

இலங்கையில் உயர்தர வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு, கொள்கை ரீதியான தெளிவு மற்றும் வேகமான முடிவெடுத்தல் ஆகியன மிக அவசியமானவை என இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தகச் சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு இது ஒரு முக்கியமான காலகட்டம் எனத் தெரிவித்துள்ள சபையின் தலைவர் சந்துன் ஹப்புகொட, சட்ட ரீதியான நிச்சயமற்ற தன்மைகளே முதலீட்டாளர்களுக்குப் பெரும் தடையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் புவியியல் அமைவிடம் மற்றும் திறமையான மனிதவளம் போன்ற சாதகமான காரணிகள் இருந்தாலும், முடிவுகளை எடுப்பதில் ஏற்படும் கால தாமதம் முதலீடுகளைப் பாதிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் எதிர்நோக்கும் சவால்களுக்குத் தீர்வு காணவும், முதலீட்டுத் திட்டங்களை விரைவுபடுத்தவும் விசேட ஒருங்கிணைப்புப் பொறிமுறை ஒன்றை உருவாக்க அமெரிக்க வர்த்தகச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் அரசாங்க நிறுவனங்களுக்கும் முதலீட்டாளர் களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தி, வெளிப்படையான வர்த்தகச் சூழலை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத் திறனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாயின், அரச மற்றும் தனியார் துறைகள் ஒன்றிணைந்து செயற்படுவதோடு, சீர்திருத்தங்களை விரைவாக அமுல்படுத்தவேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)




## கண்டி, காலிக்கு விசேட பஸ் சேவை

கொழும்பு, ஏப். 12

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பயணிகளின் போக்குவரத்து வசதிகளை இலகுபடுத்தும் நோக்கில், புறக்கோட்டையிலிருந்து கண்டி மற்றும் காலி ஆகிய நகரங்களுக்கு அதிவேக வீதி ஊடாக விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் பயண நெரிசலைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்காலிக அனுமதிப்பத்திரங்களின் கீழ் சுமார் 20 பஸ்கள் புறக்கோட்டையிலிருந்து கண்டி வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து பிரதி அமைச்சர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிரைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org